
# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

தீபம் - 66 Email : theepamlink@gmail.com TP: 026 2221022/ 026 3202532 Rs. 30/=



**மனிதகுலம் : ஓர் நம்பிக்கை தரும் வரலாறு**
அண்மைக்கால நூல் ஓர் பார்வை
Fr. S. D. ஜேம்ஸ் 05





**Covid 19 Vs விசுவாசிகள் 2020**
Fr. T. A. ஜீலியன் 08



**05வது ஆயர்த்துவ ஆண்டு நிறைவில் "தீபத்தின்" கேள்விகளுக்கு மனம் திறக்கிறார்**
திருமலை ஆயர் நோயல் இம்மானுவேல் ஆண்டகை 02




## வழமைக்குத் திரும்புகிறோம்?...

**Dr. K E கருணாகரன், மட்டக்களப்பு.**

**கொவிட் - 19** எனப் பெயரிடப்பட்டு உலகளாவிய ரீதியில் பெருந்தொற்றுநோயாக 80 இலட்சத்திற்கும் அதிகமான மக்களை நோய்வாய்ப்படச்செய்தும் 4 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் இறந்தும், பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, ஆன்மீகம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் பல்வகைக் கட்டுப்பாடுகளையும், கதவடைப்புகளையும் உலகம் மேற்கொள்ளக் காரணமாயிருந்த கொரோனா வைரசுத்தாக்கத்திலிருந்து நாம் மீண்டு வருகின்ற அறிகுறி தென்படுகின்றது. இலங்கையில் இந்நோயானது சமூகத்தொற்றாக, அதிகளவு மக்களைப் பாதிக்கக்கூடிய இரண்டாவது அலையாக இன்னமும் மாறவில்லை. அந்தவகையிலே, பொதுப்போக்குவரத்து, கல்வி போன்ற துறைகள் மீளவும் ஆரம்பிக்கப்படுகின்றன.

கடந்த நாட்களில் சமய வழிபாட்டுத்தலங்கள் மூடிய நிலையிலோ அல்லது முக்கிய தவிர்க்க முடியாத நிகழ்வுகளின்போது மட்டுப்படுத்தப்பட்ட அளவினருடனோ இயங்கிய நிலையில் அவை தற்போது வழிபாடுகளுக்காக திறக்கப்பட்டுள்ளன. கிறிஸ்தவ திருஅவைகளைப் பொறுத்தவரையில் முக்கிய ஆன்மீக நிகழ்வுகளான புனிதவார வழிபாடுகள் ஆலயங்களில் இடம்பெறாமையானது இறைமக்களிடையே தவிர்க்க முடியாத இடைவெளியை ஏற்படுத்தியது. விசேடமாக குருத்தோலையால் செய்த சிலுவை இல்லாமல் பெரும்பாலான கத்தோலிக்க இல்லங்கள் வெறுமையை உணர்கின்றன. தூய ஆவியாரின் வருகை திருவிழாவின் பின்னராக, கடந்த 12ம் திகதியிலிருந்து கட்டுப்பாடுகளுடன் ஆலயங்களில் ஆராதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இக் கட்டுப்பாடுகளின் அவசியத்தன்மை குறித்து சற்று நோக்குவோம்.

கொவிட் - 19 வைரசுத்தொற்றானது அதன் முதலாம் அலைத் தொற்றினை முடித்துவிட்டது. உலகம் பூராகவும் ஏற்பட்ட இழப்புகளின் பரிமாணத்தை நாம் அறிந்திருப்போம். தற்போது எமது தொழில் மற்றும் கல்வி, ஆன்மீக, பொருளாதார, அரசியல் நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்புகின்றன. எமது பகுதிகளிலோ, அயலில் உள்ளோரிலோ மற்றும் நண்பர்களிலோ இவ் வைரசுத் தொற்றுள்ளோர் இனம் காணப்படவில்லை. 'எறிக்கும் வெயிலில் கொரோனா கிருமி தப்பிப் பிழைக்குமா!' என்ற கருத்தும் எம்மிடையே உண்டு.

கடந்தகால அநுபவங்களைக்கொண்டு நோக்கும்போது இவ்வாறான உலகளாவிய நோய்த் தொற்றின் இரண்டாம் அலையானது அதிகளவு பாதிப்புக்களையும் உயிரிழப்புக்களையும் ஏற்படுத்தியமை கண்கூடு. ஆதலினால் எம்மிடையே நடைமுறைத் தளர்வுகள் ஏற்படுமாயின் இவ்வாறானதொரு பாரியவிளைவிற்குள் நாம் தள்ளப்படுவது தவிர்க்கமுடியாததொன்றாகிவிடும். இத்தகையதொரு நிலை எமது சுகாதாரத்துறைக்கு பாரிய சுமையாகிவிடும்.

தொடர்ச்சி 04ம் பக்கத்தில்...

## மறைமாவட்ட அறிவித்தல் பலகை



❖ இலிங்கநகர் புனித யூதா ததேயு ஆலயத்தின் பங்குத்தந்தையாக 01. 06.2020 முதல் பணியேற்கிறார் Fr. E. P ஜொனத்தன்

❖ குச்சவெளி புனித செபமாலை அன்னை ஆலயத்தின் பங்குத்தந்தையாக 21. 06. 2020 முதல் பணியேற்கிறார் Fr. நியூமன் முத்துத்தம்பி அமதி.





❖ ஜூலை 2020 வெளியீடு முதல் திருமலைத் தீபத்தின் புதிய ஆசிரியராக பொறுப்பேற்கிறார் Fr.S. டக்ளஸ் ஜேம்ஸ்.

❖ தேசிய மறையாசிரியர் தேர்வுக்கான விண்ணப்பங்களை மறைமாவட்ட மறைக்கல்வி நிலையத்தில் கையளிக்கும் இறுதித் திகதி ஜூலை 31 2020.

❖ தேசிய மறையாசிரியர் தேர்வுகள் கார்த்திகை 21ம் திகதி 2020 இற்கு பிற்போடப்பட்டுள்ளது.

## வாழ்வு சார்ந்த வழிபாடு

அருட்பணி. அலெக்சாண்டர் -இந்தியா

"திருவழிபாடு திருச்சபையின் செயல் முழுவதுமே நாடி நிற்கும் சிகரமாக அமைகிறது. அதனுடன் திருச்சபையின் ஆற்றல் அனைத்திற்கும் அது ஓர் ஊற்றாகவும் உள்ளது. ஏனெனில் நம்பிக்கையாலும், திருமுழுக்காலும் கடவுளின் பிள்ளைகளாக்கப்படும் யாவரும் ஒன்று கூடி வந்து, திருச்சபையின் அகத்தில் கடவுளைப் புகழ்வதையும், திருப்பலியில் பங்கெடுப்பதையும், ஆண்டவரின் இராவுணவை உண்பதையுமே திருத்தூது அலுவல்கள் தம் குறிக்கோளாகக் கொண்டுள்ளன." (திருவழிபாடு எண் 11, இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்)

திருவழிபாடு என்பது மூன்று முக்கியமான வழிபாடுகளை உள்ளடக்கியது: திருப்பலி, அருள் அடையாளங்கள் மற்றும் திருப்புகழ்மாலை. இவை தவிர மற்ற வழிபாடுகள் அனைத்தும் பக்தி முயற்சிகளே. செபமாலை, நற்கருணை ஆராதனை, சிலுவைப்பாதை, நவநாட்கள், புனிதர் வணக்கம் என அனைத்தையும் விட திருவழிபாடு தன்னியல்பிலேயே மிகச்சிறந்தது. (திருவழிபாடு எண் 13)

இப்படி மிகச்சிறப்பு வாய்ந்த திருவழிபாட்டில் திருப்பலி மிக முக்கியமானதென திருச்சபை வலியுறுத்துகிறது. "நற்கருணையே கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும், சிகரமுமாய் இருக்கிறது. (திருச்சபை எண் 11) மற்ற அருள் அடையாளங்கள் திருச்சபையின் அனைத்து விதமான பணிகள், சேவைகள் எல்லாம் நற்கருணையுடன் பிணைக்கப்பட்டு, அதை நோக்கியே செயல்படுகின்றன. ஏனெனில் நற்கருணையில் தான் திருச்சபையின் முழுமையான ஆன்மீக நன்மையும் உள்ளது. அதாவது நம் பாஸ்காவாகிய கிறிஸ்துவே அந்த முழுமையான ஆன்மீக நலன்" ( கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி எண் 1324)

இப்படிப்பட்ட உன்னதமான, மிகச்சிறப்பு வாய்ந்த நற்கருணையைப் பெற நாம் அனைவரும் பேறுபெற்றவர்களே. ஆனால், இன்றைய காலகட்டத்தில், (COVID - 19) நோய்த்தொற்று உலகையே ஆட்டிவிக்கிற சூழலில், உலக நாடுகளனைத்தும் ஒற்றைக் கிருமியிடம் தோற்று முழு அடைப்புக்குள் முடங்கிவிட்ட நிலையில் கூடி வந்து இறைவேண்டல் செய்ய தடை விதிக்கப்பட்டு ஆலயங்களும் பூட்டப்பட்ட இக்கட்டான தருணத்தில் எப்படி திருவழிபாட்டில் பங்கேற்பது? எப்படி ஆன்மீக வாழ்வில் தளராதிருப்பது? பல ஆண்டுகளாக பயிற்றுவிக்கப்பட்டு, பக்குவப்படுத்தப்பட்ட நம்பிக்கையாளர்கள் பார்வையாளர் நிலையிலிருந்து பங்கேற்பாளர் நிலைக்கு நகர்ந்து கொண்டிருக்க இன்றைய சூழலில் தொலைக்காட்சிப் பெட்டியில் திருவழிபாடு ஒளிபரப்புவதைப் பார்க்க மீண்டும் பார்வையாளர்களாக மாறுகின்ற இக்கட்டான நிலை. கையில் ரிமோட்டுடன் டி.வி முன் அமரும் நாம், அடிக்கடி சேனல்கள் மாற்றுவது வாடிக்கைதானே.

தொடர்ச்சி 04ம் பக்கத்தில்...

## மெய்நிகர் தீய உறவுகளால் சிதைந்து போகும் குடும்ப வாழ்வு

### Virtual Adultery and Family Life

- அருட்பணி. கிறிஸ்டி போல், கண்டி மறைமாவட்டம் -

இயேசு திருச்சபையை அன்பு செய்வது போல மணத்துணைவர்களும் ஒருவர் மேல் ஒருவர் தூய்மையான அன்பு காட்ட வேண்டும். தூய்மையான அன்பிலே உண்மையான கத்தோலிக்க குடும்ப வாழ்வு தங்கியுள்ளது. (எபேசியர் 5:21) எவன் ஒருவர் தன் மனைவியை விலக்கி விட்டு வேறொருவரை மணக்கிறானோ அவன் அவளோடு விபசாரம் செய்கிறார் என்று கூறிய இயேசு, யாரேனும் ஒரு பெண்ணை இச்சையோடு நோக்கும் போதே அவன் அவளோடு விபசாரம் செய்கிறான் என்கின்றார். (மத்தேயு 5:27) புனித பவுல், திருமண வாழ்வை அனைவரும் உயர்ந்ததென கருதுங்கள். உங்கள் மணவறைப் படுக்கை மாசுறாமல் இருக்கட்டும் என்கின்றார். (எபி 13:4) பிறன்மனை நயத்தல் அல்லது விபசாரம் என்பது திருமணத்திற்கு வெளியே வேறொருவரோடு அந்நியோன்ய தொடர்புகள் பேணுவதாகும். இது இவ்வாறு இருக்க இன்றைய நவீன உலகில் மெய்நிகர் தீய உறவுகள் அல்லது மெய்நிகர் விபசாரம் (Virtual Adultery) மணமுறிவிற்கு ஏதுவான காரணியா? என விவாதிக்கப்படுகின்றது.


**மெய்நிகர் விபசாரம் என்றால் என்ன?**

இணையத்தளம் இன்று "காட்டிக்கொடுத்தல்", மண உறவிற்கு எதிராக துரோகம் இழைத்தல் ஆகியவற்றின் பொது களமாக அமைந்து மணவிலக்கு நோக்கி மணத்துணைவர்களை கொண்டு செல்லும் ஊடகமாக இருக்கின்றது.

தொடர்ச்சி 09ம் பக்கத்தில் ...

**"முடியாது என்று நீ சொல்வதையெல்லாம் யாரோ ஒருவன் எங்கோ செய்து கொண்டிருக்கிறான்" - அப்துல் கலாம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 5 வருட ஆயர்த்துவ வாழ்வின் நிறைவைக் காணும் எமது மறைமாவட்ட ஆயருடன் நேர்காணல்

**01. உங்களது 5 வருட ஆயர்த்துவ வாழ்வில் மந்தைகளின் வாடையை அறிந்திருக்கிறீர்களா?**

5 வருட ஆயர்த்துவ வாழ்வில் மந்தையின் வாடையை அறிய முடிந்தது. பங்குத் தரிசிப்புகள், திருவிழா திருப்பலி ஒன்றுகூடல்கள், விசேட அழைப்பு, தேவைக்கேற்ப பங்குகளையும் மக்களையும் சந்தித்தல் மூலமாக மக்களின் வாழ்க்கைமுறை, ஆன்மீகம், தேவைகளை அறிய முடிந்தது.

**02. மந்தைகளின் வாடையை சுவைத்ததின் மூலம் பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள முடியுமா?**

ஆயராக தனித்து அனைத்துத் தேவைகளையும் கவனிக்க முடியாது. ஆயரின் வலக்கரமாக குருக்கள் இருக்கிறார்கள். இவர்களோடு ஆலோசனைச் சபை, இருபால் துறவறத்தவர், பொது நிலைக் கிறிஸ்தவர் என இணைந்ததே திருஅவை. மக்களை அறிவதன் மூலம் அவர்களது தேவைகளை இனம்காண முடியும். மக்களில் இருவகை:

அ. கத்தோலிக்க கிறிஸ்தவ நம்பிக்கையாளர்கள்: மறைமாவட்டம், திருஅவை, எமது சான்று வாழ்வு, ஆன்மீக, பொருளாதார வளர்ச்சியில் பெரும் ஆவல் கொண்டவர்கள் இவர்கள். இவ்வளர்ச்சியில் தடைகள் வரும்போது அமைதியாக ஒதுங்குபவர்கள் பலர். சிலர் எதிர்த்துப் போராடி தமது பங்களிப்பை செய்கிறார்கள். இவர்களது மனநிலைகளை புரிந்துகொள்ள முடிகின்றது. ஆயினும் பங்கில் பொறுப்பிலுள்ள குருவின் வழிகாட்டல், ஒத்துழைப்போடு தான் எதையும் சாதிக்க முடியும்.




ஆ. கிறிஸ்தவர் அல்லாத ஏனையோர்: திருகோணமலை பல்சமய, பல்லின மக்களைக்கொண்ட மாவட்டம். மக்கள் யுத்த வடுக்களோடு இன்னும் மீள முடியாமல் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். திருகோணமலை மாவட்டத்தில் எல்லைப்புற கிராமங்களில் வாழும் மக்களை தரிசித்து அவர்களது தேவைகளை இனம்கண்டு உதவுவது ஆயர் எனும் நிலையில் அதுவும் எனது பணியே. இவ்வாறு உதவும்போது அதுவே சிறப்பான சான்றாக அமைந்துவிடுகின்றது.

**03. உங்கள் மந்தைகளின் இறைநம்பிக்கை பயணம் குறித்து எங்களோடு பகிர்ந்துகொள்ள முடியுமா?**

நம்பிக்கையாளர்கள் ஆன்மீக தாகத்தோடு எப்போதும் இருக்கிறார்கள். இறைநம்பிக்கையில் குறைவில்லை. ஆனால் ஆன்மீகத் தலைவர்களாக நாம் பொறுப்பற்று செயல்படும்போதும் மக்களின் இறைநம்பிக்கைக்குத் தடையாக வரும்போதும் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் நாமே. இறைநம்பிக்கையை வளர்க்க நற்கருணை ஆராதனைகள், செப வழிபாடுகள், ஆலய திருவிழா, சிறப்பு ஆன்மீக ஆயத்தங்கள் என பல நடைபெறுகின்றன. இவற்றை மக்கள் முழுமையாகப் பயன்படுத்துகின்றார்கள் என்பது எனது நம்பிக்கை.

**04. 24 மணி நேர நற்கருணை ஆராதனை நீங்கள் எதிர்பார்த்த பலனைத் தந்ததா? இப்பயணத்தில் இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றம்?**

24 மணிநேர முற்றிலும் அமைதியான நற்கருணை ஆராதனை 2016ல் திருத்தந்தை பிரான்சிஸ் அறிமுகம் செய்த பக்தி முயற்சி. அதே ஆண்டு எமது மறைமாவட்டத்தில் அனைத்து ஆலயங்களிலும் செயல்படுத்த வேண்டும் என கூறிய போது இது தேவைதானா எனும் கேள்விகள், சாத்தியமாகுமா எனும் சந்தேகம், மக்களால் முடியாது எனும் தீர்ப்பு, இடையில் பாடல்கள் பாடலாமே எனும் கோரிக்கை என்று பல தடைகள். ஆனால் திருத்தந்தை குறிப்பிட்டதுபோல முழுமையான அமைதியோடு இவ் ஆராதனை நடைபெற வேண்டுமென நான் உறுதியாகக் கூறிவிட்டேன். மறைவமாட்டத்தில் நற்கருணை ஆராதனை நடைபெற்ற அனைத்து ஆலயங்களுக்கும் நான் சென்று அமைதியாக ஆராதனை செய்தேன். மிகுந்த பலனைத் தந்தது. மீளாய்வு செய்தபின் இதுபோன்ற ஆராதனை ஒவ்வொரு தவக்காலத்திலும் நடைபெறும் என்பதையும் கூறினேன். 2018ஆம் ஆண்டு 24 மணிநேர ஆராதனையோடு 12 மணி நேர ஆராதனையையும் அறிமுகம் செய்தேன். இது ஒரு மாதம் ஒரு பங்கு எனும் ரீதியில் ஒழுங்கு செய்யப்பட்டது. ஒரு பங்கில் ஆராதனை நடைபெறும் போது அயலில் உள்ள பங்குகள் கலந்துகொள்வது நல்லது. 2018 -2019 இப்பக்தி முயற்சி நடைபெற்றது.



இது ஓர் பக்தி முயற்சி. ஆன்மீக சுவை. திருத்தந்தை 2016ல் அறிமுகம் செய்தபின் யார் நடைமுறைப்படுத்தினார்கள் என்று ஆராயவில்லை. அதை மக்களின் ஆன்மீக நலனுக்காகப் பயன்படுத்தவது எமது கடமை. இச் சுவையைப் பெற்றவர்கள் பங்கில் பங்குத் தந்தை அறிவித்தாலும் அறிவிக்காவிட்டாலும் சந்தர்ப்பங்களையும் நேரத்தையும் பயன்படுத்தி நற்கருணை ஆராதனையில் ஆண்டவரின் ஆசீரை சுவைப்பார்கள் என்பது எனது நம்பிக்கை.

எனவே 24 மணிநேர நற்கருணை ஆராதனை தந்த பலன், முன்னேற்றம் என்பது என்னைப் பொறுத்ததல்ல. ஆனால் அறிமுகம் செய்து, திட்டமிட்டு, அறிவித்து, உறுதியாக இருந்து நான் எடுத்த முயற்சி எனக்கு பூரண திருப்தியாகவே உள்ளது.

**05. ஒவ்வொரு ஆண்டும் நடைமுறைப்படுத்திய 3 தலைப்புக்கள் வரவேற்பை அளித்ததா? அதனைச் செயற்படுத்துவதில் நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் குறித்து எம் வாசகர்களோடு நீங்கள் பகிர விரும்பும் விடயம்?**

வரவேற்பை விட சவால்களே அதிகம். இங்கும் ஏன் 3 தலைப்புகள் ஒரு தலைப்பு போதுமே போன்ற கேள்விகள். வருடாவருடம் தலத் திருஅவையின் தீர்மானங்களுக்கேற்ப முதல் தலைப்பும் ஏனைய இரண்டும் மறைமாவட்ட செயல்திட்டங்களுக்கும் தேவைகளுக்குமேற்ப அமைந்தவை. மூன்று வருடங்கள் செயல்படுத்த முடிந்தது. ஒரு தலைப்போ மூன்று தலைப்போ அனைத்தும் எமது மக்களுக்காகவும் இறைபுகழுக்காகவுமே. இந்த மனநிலை இருந்தால் எத்தனை தலைப்புகள் முன்வைக்கப்பட்டாலும் மனது அவற்றை வரவேற்கும்.

**06. எம் மறைமாவட்டத்தின் "திருமலைத் தீபம்" பத்திரிகை, "அலை ஓசை" சஞ்சிகை இவற்றின் நம்பிக்கைக்கான பங்களிப்பு பற்றி உங்கள் கருத்து? இவை இன்னும் வளர்ச்சியடைய உங்களது ஆலோசனை.**

மறைமாவட்டம் பிரிந்ததிலிருந்தே "திருமலைத் தீபம்" எனும் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும் பல காரணங்களால் இப்பத்திரிகை ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட திகதியில் வெளிவரவில்லை. ஆரம்பத்தில் ஆக்கங்கள் குறைவாக இருந்தாலும் காலப்போக்கில் இதன் வளர்ச்சி பெரிது. பங்குமட்டத்தில் இதன் விற்பனை மந்தகதியில் இருந்ததும் பொறுப்பானவர்களின் ஒத்துழையாமையும் மனவேதனைக்குரியதே. பத்திரிகை மூலம் எவ்வளவு விடயங்களை மக்களுக்கு எடுத்துச் செல்லலாம் என்பதை எல்லோரும் உணர்ந்து செயல்படவேண்டும். இது எனது முயற்சி, எனது படைப்பு எனவே நான் செயல்படுவேன், ஒத்துழைப்பேன். இது வேறொருவர் பணி, எனவே நான் ஏன் எனது நேரத்தை வீணடிக்க வேண்டும் எனும் மனநிலை தவறானது. திருமலை தீபம் தொடர்ந்து வளரவேண்டும், தவறாது உரிய காலத்தில் வெளிவர வேண்டும். அலையோசை சஞ்சிகை பல சவால்களின் மத்தியில் தொடங்கப்பட்டது. கிறிஸ்தவரல்லாதவரையும் கவரும் வண்ணம் நல்ல பல செய்திகளை இது தாங்கி வருகின்றது. பயனுள்ளதாகவும் உள்ளது.

**07. 5 வருட ஆயர்த்துவ வாழ்வில் நீங்கள் சந்தித்த சவால்கள் எவை? முகம் கொடுத்த பிரச்சனைகளால் நீங்கள் பெற்றுக்கொண்ட அனுபவம் குறித்து அறிய ஆவலாய் உள்ளோம்?**

சவால்கள் பல. எனது நிலையில் இருந்து பார்த்தால்தான் அதன் வலி புரியும். எனது அபிஷேக திருப்பலியில் எனது உரையில் மூன்று மேய்ப்புப்பணி திட்டங்களைக் குறிப்பிட்டிருந்தேன். மறைமாவட்ட ஆன்மீகம், அனைவருக்குமான கல்வி, சமூகப் பணி. தடைகள் ஏதுவாக இருந்தாலும், சவால்கள் உச்சத்தை அடைந்தாலும் சோர்வுற்று மனமுடைந்து போனாலும் எனக்கு எழுகின்ற ஒரே சிந்தனை - இது எனது பணியல்ல, இறைபணி. எனவே அவரே அனைத்தையும் பார்த்துக்கொள்வார் எனும் சிந்தனை மீண்டும் எனக்குள் புத்துயிரையும் உற்சாகத்தையும் தர தடைகளையும் தாண்டி செயல்படுவதுண்டு.

**08. இன, மத, மொழி வேறுபாடுகளை கடந்த எம் மறைமவாட்ட திருஅவையின் பணியில் நீங்கள் எடுத்துவரும் முயற்சிகள் குறித்து நாம் அறிந்துகொள்ளலாமா?**

திருகோணமலையில் பொதுநல அமைப்பு ஒன்றிற்கு போஷகராக உள்ளேன். அவர்களுடன் அல்லது தனித்து மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளேன். பல கிராமங்களை நேரடியாகச் சென்று மக்களை சந்தித்து அவர்கள் நிலை, தேவைகள் அறிந்துள்ளேன். எம்மோடு தொடர்பில் இருக்கும் நன்கொடையாளர்களோடு தொடர்பு கொண்டு கிராம மக்களுக்குத் தேவையான உதவிகளையும் செய்துவருகின்றேன். அண்மையில் நான் விஜயம் செய்த கிராமம் சுங்கான்குழி. இது கிண்ணியா பிரதேச சபைப் பிரிவுக்குள் உள்ளது.

**09. திருகோணமலை மறைமாவட்டத்தில் எல்லா ஆலயங்களிலும் திருப்பலிகள் ஒரே அமைப்பைக் கொண்டதா?**

அருளடையாளக் கொண்டாட்டங்கள் எல்லா ஆலயங்களிலும் ஒரே வழிபாட்டு முறையாக உள்ளதா? இதற்கான காரணம் என்ன? (உ+ம்) திருமுழுக்கு நாட்கள் ஒரே நாட்களா.

உலகம் முழுவதும் திருப்பலிகள் ஒரே அமைப்பை கொண்டதே. அதேபோல திருவருட்சாதனங்கள் நிறைவேற்றும் முறையும் ஒன்றே. ஆனாலும் சில சந்தர்ப்ப சூழ்நிலைகளால் சில மாற்றங்கள் ஏற்படுவதுண்டு. கொரோனா நோய் காரணமாக சில மாற்றங்கள் ஏற்பட்டதை அனைவரும் அறிவோம். இக்காலத்தில் எமது வழிபாடுகளில் எப்படிப்பட்ட மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என இலங்கை ஆயர் மன்றத்தால் சுற்றறிக்கை விடப்பட்டது. அதன் பிரதியை அனைத்துக் குருக்களுக்கும் அனுப்பி வைத்துள்ளேன். அண்மையில் நானும் குருக்களுக்கு வேண்டிய அறிவுறுத்தல்களைக் கொடுத்துள்ளேன்

பொதுவாக திருப்பலி மற்றும் அருட்சாதனங்களை நிறைவேற்றுவது பற்றி தலத்திருஅவையின் திருவழிபாட்டு வழிகாட்டலுக்கமைய எமது மறைமாவட்டத்திற்கென்று "மேய்ப்புப்பணி வழிகாட்டி" (Pastoral Directives) எனும் சிறுநூல் ஒவ்வொரு குருக்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. திருமுழுக்குக் கொடுக்கப்படும் நாட்கள் பங்கின் சூழ்நிலைக்கேற்ப வேறுபடலாம். விசேடமாக மக்கள் அதிகம் கூடும் ஞாயிறு திருப்பலியன்போது நடைபெறவேண்டும் என்பதே எமது அறிவுறுத்தல்.

**10. மாணவர்களுக்கு இறைஅழைத்தலை பங்கு ரீதியாகவும், சமூக ரீதியாகவும் வளர்ப்பதற்கு எமக்கு (இறைமக்களுக்கு) நீங்கள் தரும் ஆலோசனைகள் எவை?**

தேவ அழைத்தல்பற்றி செபிக்க வேண்டிய கடமை அனைவருக்கும் உண்டு. ஒவ்வொரு வியாழன் திருப்பலி நிறைவில் தேவ அழைத்தல் பற்றிய செபம் அல்லது இறுதிப்பாடல் "ஆண்டவரே பரிசுத்த குருக்களை….." எனும் பாடலையோ அல்லது தேவ அழைத்தல் பற்றிய வேறு பாடலையோ பாட வேண்டுமென்றும் ஞாயிறு திருப்பலியின்போது நம்பிக்கையாளர் மன்றாட்டில் ஒரு மன்றாட்டை தேவ அழைத்தலுக்காக செபிக்க வேண்டுமென அனைத்துக் குருக்களுக்கும் அறிவித்துள்ளோம்.

எமது சிறிய குருமட மாணவர்கள் ஆர்வத்தோடு அதன் அதிபர் அருட்பணி ரஜீவா தலைமையில் உற்சாகத்தோடு பயிற்சி பெற்று வருகிறார்கள்.

எம் மறைமாவட்டத்தில் தேவ அழைத்தல் உருவாக செயல்படும் முறை பற்றி பல இடங்களில் குறிப்பிட்டுள்ளேன். ஒரு மாணவனோடு தொடர்புடையவர்கள் யார்? பெற்றோர், ஞானப்பெற்றோர், உறவினர், பங்குத்தந்தை. தெரிந்த குருக்கள், இருபால் துறவற சபையினர், மறையாசிரியர், கத்தோலிக்க ஆசிரியர்கள் மற்றும் பங்கில் பணியாற்றுவோர். இவர்களுக்குள் ஓர் வலையமைப்பு உருவாக்கப்பட வேண்டும். ஒரு மாணவனுக்கு தேவஅழைத்தல் பற்றிய வெளிப்பாடுகள் தென்பட்டால் அதுபற்றி ஏனையவர்களுக்கும் அறியத்தந்து அம்மாணவனுக்கு வேண்டிய உற்சாகத்தைக் கொடுத்து வழிநடத்தலாம். உரிய காலத்தில் சிறிய குருமட அதிபருக்கும் அறிமுகம் செய்து அங்கு நடைபெறும் "come and see" நிகழ்ச்சிகளுக்கும் அனுப்பி வைக்கலாம்.

குருக்கள், இருபால் துறவறத்தவரின் ஆன்மீக வாழ்வே தேவ அழைத்தலை ஊக்குவிக்கும் மிகவும் சிறந்த சாதனம்.

தொடரும்...

செவ்வி கண்டவர் - செல்வி. கிறிஷாந்தா குரூஸ்

"உதவும் கரங்கள் பிரார்த்திக்கும் உதடுகளை விட சிறந்தது." - அன்னை தெரேசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணா லட்டு தின்ன ஆசையா?



வாசகர்களுக்கு என் பணிவு.

கொரோனா பாதிப்பு, வருமான இழப்பு, வீடுகளுக்குள்ளே முடக்கம், முகக்கவச பயணம் என்ற அசௌகரிய வாழ்க்கையில் நகர்ந்துகொண்டிருக்கும் உங்களை என் எழுத்துக்கள் வழியே சந்திக்க நம் மறைமாவட்ட மற்றும் உலக திருச்சபையின் நிலை, செயற்பாடு, இவற்றின் எதிர்கால பணி குறிந்து கலந்துரையாட, அறிவிக்க, விவாதிக்க, திட்டமிட **திருமலை தீபம்** வழியாக பத்திரிகையாசிரியராக புதிய அவதாரமெடுப்பதில் மகிழ்ச்சி.

**பொய்மையிலிருந்து மெய்மைக்கு** என்ற தலைப்போடு facebookல் பல்வேறு மூடநம்பிக்கைகளைச் சாடியும், தவறான போதனைகளை தோலுரித்தும், போலிப் போதகர்களின் ஏமாற்று வேலைகளின் சாயம் வெளுக்கப்பண்ணியும் வெளிவந்த என் பதிவுகள் ஒருசிலரின் நலனுக்காக சூட்சமமான முறையில் நசுக்கப்பட்டபோது அந்த பதிவுகளை மட்டுமல்லாது எனது தனிப்பட்ட facebook கணக்கையே மூடும் நிலைக்குத் தள்ளப்பட்டேன். அதன்பின் மக்கள் தொடர்பு ஊடகங்களிலிருந்து தள்ளியே இருந்தாலும் இறைமக்களை அறிவூட்டும் ஓர் மேடைக்காக காத்திருந்தேன். இந்நிலையில் **திருமலை தீபம்** பத்திரிகையின் ஆசிரியர் என்ற பணிப்பொறுப்பு, "கண்ணா லட்டு தின்ன ஆசையா?" என்ற அழைப்பாய் என்னுள் எதிரொலித்தது. லட்டுத்தின்ன கசக்குமான என்ன! இயேசு சிலுவையைக்கொண்டு புதிய அத்தியாயத்தை இம்மண்ணில் வாழும் அனைத்து மக்களுக்காகவும் எழுதினார். பாவம், அடிமைத்தனம், தீட்டு, அதிகாரம் காட்டுதல், புகழ்பாடுதல், ஓரங்கட்டுதல், ஒத்தோதுதல் என்று பழக்கப்பட்ட சமுதாயத்தில் அன்பு, நேசம், அனைவரும் சமம், தலைவனே பணியாளன், வேற்றுமைகளற்ற சமூகம் என்ற புதிய வாழ்வியலைச் சிலுவையின் வழியாகப் பறைசாற்றினார். சிலுவைக்குப் பதில் பேனாவைக் கையிலேந்தி இயேசுவின் புதிய வாழ்வியலைப் பறைசாற்ற நான் பயணப்படுதில் பேருவகை அடைகிறேன்.



## ஆசிரியர் பேனா

திருமலை தீபம் வெறும் தகவல்களை வழங்கும் செய்தித்தாள் அல்ல. மாறாக எலும்புகளையும் மச்சைகளையும் ஊடுருவிப்பாயும் இறைவார்த்தையின் வழி அனைத்து நிகழ்வுகளையும் சீர்தூக்கிப் பார்த்து உங்களிடம் கொண்டுவரும் ஊடகம் என்பதை வாசகர்கள் உணரும் வண்ணம் இப்பத்திரிகையின் பக்கங்களை பரிசீலிக்க புதிய எழுத்தாளர்களை உள்வாங்கும் பணியில் நாம் காலடி எடுத்துவைத்துள்ளோம். இது வெறுமனே அதிகாரத் திருச்சபையின் அறிவித்தல் பலகையல்ல என்பதை இறைமக்கள் அறிந்து கொள்ளவேண்டும். அதற்காகவே உங்கள் அவலங்கள், ஆதங்கங்கள், அக்கறையான கருத்துக்களை ஆக்கங்களாக பிரசுரிக்க நாம் தயாராய் காத்திருக்கிறோம். எல்லோரும் பயன்பெறும்படி, நம்பிக்கையில் வளரும்படி எழுதுங்கள்.

கேள்வி கேளுங்கள் விடைகள் கிடைக்கும் சுட்டிக்காட்டுங்கள் பிழைகள் திருத்தப்படும் பேய்களை கணக்கெடுக்காதீர்கள் அவை தானாகவே ஓடிவிடும்: சூனியம் என்று குழிதோண்ட வருவோரை அடித்துவிரட்டுங்கள் வீடுகள் உயிர்ப்பின் தோட்டங்களாகும்: மூடநம்பிக்கைகளை களையுங்கள் பங்குத்திருச்சபைகள் இறைவன் வாழும் இல்லங்களாக மாறும்.

இது நம் மறைவாட்டத்தில் நற்செய்தி மீள்அறிவிப்பு ஆண்டு. இயேசு யூதர்கள் நடுவில் திருச்சட்டத்தை மீள்அறிவிப்புச் செய்ததைப்போல இறைமக்கள் நாம் நம் திருச்சபைக்குள் விடுதலையின் நற்செய்தியை மீள் அறிவிப்பு செய்ய அழைக்கப்பட்டுள்ளோம். இதற்கு முன்னோடி நம் திருத்தந்தை பிரான்சிஸ். அவரின் வாழ்வைப் பின்பற்றி திருமலை ஆயரும் பொதுநிலையினர் உங்களை பங்கேற்கும் நம்பிக்கையாளராக வாழ தம் இவ்வாண்டிற்கான சுற்றுமடலில் அழைத்துள்ளார்.

இயேசுவின் பணியில் கைகோருங்கள், சிலுவை வழிவந்த உண்மையான விடுதலையின் நற்செய்தியை சேர்ந்தே மீள் அறிவிப்பு செய்வோம்.

ஆசிரியர்

## நற்செய்திக்காகவும், அன்புக்காகவும் துன்புறுகிறார்கள் என்றால், இவர்கள் நம் காலத்தின் மறைசாட்சிகள் - திருத்தந்தை பிரான்சிஸ்

வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தில் கூடியிருந்த மக்களுக்கு, மத் 10, 26 – 33, நற்செய்தி வாசகத்தை மையப்படுத்தி, மூவேளை செப உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கிறிஸ்துவைப் பின்செல்வோர், தங்கள் வாழ்வில், அனுபவத்தில் பகைமை, அடக்குமுறை மற்றும் கடவுளால் கைவிடப்பட்டதாக உணரும் போதும் கூட அஞ்சாமல் இருக்கவேண்டும் என இயேசு தொடர்ந்து அழைப்பு விடுக்கிறார் என்றார்.

### பகைமை

இறைவார்த்தையை உள்ளபடியே அறிவிப்பதற்குப் பதில், அதை இனிப்பில் தோய்த்து அறிவிப்பதால், உண்மையில் அதை அறிவிப்பவருக்கு எதிராக செயல்படுவோர் குறித்துப் பேசிய திருத்தந்தை, இறைவார்த்தையை, திறந்தமனதுடனும், பொதுவிலும் அறிவிக்குமாறு இயேசு தம் சீடர்களை ஊக்கப்படுத்துகிறார் என்று கூறினார்.




### அடக்குமுறை

தம் சீடர்கள், வன்முறை அடக்குமுறைகளை நேரிடையாக எதிர்கொள்வர் என்ற எச்சரிக்கையை விடுக்கும் இயேசுவின் கூற்று, எல்லாக் காலங்களிலும் உண்மையாகின்றது என்றுரைத்த திருத்தந்தை, நற்செய்திக்காகவும், அன்புக்காகவும் துன்புறுகிறார்கள் என்றால், இவர்கள் நம் காலத்தின் மறைசாட்சிகள் என்றும், ஆணவம் மற்றும் வன்முறையால் நற்செய்தி அறிவிக்கும் சக்தியை அடக்கும் வழிகளைத் தேடுவோர் குறித்து அஞ்சத் தேவையில்லை என்றும் கூறினார்.

### கடவுளால் கைவிடப்பட்ட உணர்வு

கிறிஸ்துவின் சீடர்கள் சிலநேரங்களில் கடவுளே தங்களைக் கைவிட்டதுபோன்று உணரலாம், அச்சூழலிலும்கூட, வாழ்வு கடவுளின் கரங்களில் உள்ளது என்பதை அறிந்து, அஞ்சாமல் இருக்கவேண்டும் என்று அழைப்பு விடுத்தார் திருத்தந்தை.

வத்திக்கான் இணையம்




"இவ்வுலக வாழ்க்கையில் சம்பாதித்துக் கொள்ள வேண்டிய குணங்கள் எல்லாவற்றிலும் மிகமிக உயர்ந்தது பொறுமை." - மகாகவி பாரதியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படித்ததில் பிடித்தது

## சொற்போர்



ஞானிகள் இருவர் சண்டையிட்டுக் கொண்டனர்.
சொற்போர் மும்முரமானது.

இவர் அவர் மேல் கருத்துக்களை வீச...
அவர் இவர் மேல் எதிர்க் கருத்துக்களை வீச...
அறிவுச் சண்டை முற்றிக் கொண்டே போனது.

இதைப் பார்த்த குயில்கள் இரண்டும் பேசிக் கொண்டன:
இப்படி ஞானிகள் சண்டையிட்டுக் கொள்கின்றனரே... அசிங்கமில்லையா?

இல்லை இல்லை. இரண்டு இனிப்புக் கடைக்காரர்களுக்குள்
சண்டை வந்தால் என்ன நடக்கும்...?

இருவரும் ஒருவருக்கொருவர் இனிப்பால் அடித்துக் கொள்வார்கள்.

அப்படிச் செய்தால் சுற்றி இருப்பவருக்கெல்லாம் இனிப்பு இலவசமாய் கிடைக்கும் அல்லவா?
அது தான் இங்கு நடக்கிறது.

தொடர்ந்தது:
ஞானிகள் சண்டை ஞானத்திற்கு விருந்தே...!

இரு ஞானிகள் சண்டை...
அறிவாளிகளுக்குக் கொண்டாட்டம்.
இரு அரசியல்வாதிகள் சண்டை...
நாட்டுக்குத் திண்டாட்டம்.

அருட்பணி. T. கிங்ஸ்லி றொபட்

# 03ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 24 | 03 |
| 11 | 03 |
| 1937 | 2017 |



**வீரப்பன் செல்லத்துரை ஜோசப்**

பாசத்தை உம் வளர்ப்பில் கண்டோம். தியாகத்தை உம் செயலில் கண்டோம். மூன்று ஆண்டுகள் மறைந்து போய்விடினும் ஆறாது உம் இழப்பு எம் வாழ்வில் அப்பா! துயர் சுமந்து எமக்காய் திரியாகி ஒளி தந்தீர். வலிகளை நீர் சுமந்து வழிகளை எமக்கு காட்டினீர் அப்பா!
நித்தமும் உமது அன்பைப் பெற்றிட ஆசிக்கின்றோம். நித்தியமாய் நின் ஆன்மா இளைப்பாற நித்தமும் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்,
அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

இல : 61, 1வது ஒழுங்கை
நித்தியபுரி
3ம் கட்டை
திருகோணமலை

பக்கம் 01- தொடர்ச்சி... வறுமைக்குத் ........

தற்போதுகூட 500 இற்கும் அதிகமான கொரோனா நோயாளர்கள் சிகிச்சை பெறுகின்றனர். நான்காயிரத்திற்கும் அதிகமானோர் தனிமைப்படுத்தல் முகாம்களில் உள்ளனர். வெளிநாடுகளிலுள்ள எம்மவர்கள் ஆயிரக்கணக்கானோர் இலங்கைக்கு கொண்டு வரப்படக் காத்திருக்கின்றனர். சில மாதங்களுக்கு இந்நிலை நீடிக்கவுள்ளது. இவையே எமது நாட்டிற்கு குறிப்பிடத்தக்க சுமையைக் கொடுக்கக்கூடியதாக இருக்கும்போது, இரண்டாவது அலையாக அதாவது சமூகத் தொற்றாக இக்கொரோனா மாறிவிடக்கூடாது என்பதில் நாம் கவனமுடன் இருத்தல் அவசியமாகின்றது. எனவே ஆலயங்களில் பக்தர்கள் கூடுவதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளைப் பார்ப்போம். இதில் பின்வரும் விடயங்கள் உள்ளன.

1. கைகளை சவர்க்காரமிட்டு 20 வினாடிகள் கழுவுதல், தொற்றுநீக்கி பாவித்தல்
2. முகக் கவசம் அணிந்திருத்தல் இது முகம், வாய் ஆகியவற்றை மூடியிருத்தல் வேண்டும்
3. சமூக இடைவெளியைப்பேணுதல்: இருவருக்கிடையே ஒரு மீட்டர் தூரமாவது இருத்தல்
4. மட்டுப்படுத்தப்பட்டளவிலான பக்தர்கள் (50 பேர் மட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்)

இவைகளை உற்றுநோக்கும்போது தன்சுத்தம், தொற்றுப்பரவலுக்கு விலகியிருத்தல் ஆகிய தற்காப்பு நடைமுறைகளே கொரோனாத் தொற்றிலிருந்து நம்மைப் பாதுகாக்கும் முறைகளாக உள்ளன. ஆகவே இவற்றினைக் கைக்கொள்வதற்கான வசதிகளை ஆலயங்கள் மேற்கோண்டிருக்கும். கைகளைக் கழுவ தண்ணீர் வசதிக்குறைவு ஏற்படும் சந்தர்ப்பங்களில் தொற்றுநீக்கி திரவத்தினை பயன்படுத்தவேண்டும். இவை ஆலயத்திற்கு செலவீனத்தை ஏற்படுத்தும். இறைமக்கள் பங்களிப்பும் ஒத்துழைப்பும் இன்றியமையாததாகும். மேலும் நற்கருணை விருந்து வேளையில் மக்கள் நெருங்கி வருவதை தவிர்க்கவும், நற்கருணை வழங்குபவர் மற்றும் பெறுபவர் இருவரது முகங்களுக்கிடையில் உள்ள தூரத்தினை பேணும் நோக்கிலும் நற்கருணை பெறுபவர் முழந்தாள்படியிட்டும், அவரது கையில் நற்கருணை வழங்கப்படுவதுமாக திருஅவை எடுத்த முடிவு வரவேற்கத்தக்கது. நற்கருணை பெறும்போது பக்தியாக முழந்தாளில் பெற்றுக்கொள்வது கடைப்பிடிக்கப்படவேண்டிய முறையாகும். குறிப்பாக இளையோர் இதனைக் கடைப்பிடித்தல் அவசியமானது. முழந்தாளிடுதல், எழுதல் போன்றவை எமது மூட்டுக்களுக்குப் பயிற்சியாகின்றது. திருஅவை இதனைக் கடைப்பிடித்தல் அவசியமானது. வயதானோர், இயலாதோர் விதிவிலக்கானவர். அது ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது.
கொரோனாத் தொற்றிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்வதும் அதனால் ஏற்படும் இழப்புக்களை தவிர்த்துக்கொள்வதும் எமது கைகளிலே உள்ளன. இறையருளுடன் நலம்பெறுவோம்.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'

Dr. K E கருணாகரன்
பெண்நோயியல் மகப்பேற்றியல் நிபுணர், போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு
சிரேஷ்ட விரிவுரையாளர், சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை




1ம் பக்கத் தொடர்ச்சி ... வாழ்வு சார்ந்த...

நாம் இறைவன் வாழும் ஆலயங்கள் நம்மோடு வாழ்வோர். நாம் சந்திக்கும் மனிதர்கள் அனைவரும் "இறைசாயல்கள்" (தொ.நூ 1: 26) கண்ணியமான, ஒழுக்கமான, அன்பான வாழ்வு நம்மிலிருக்கிற இறைவனுக்கு நாம் செய்யும் வழிபாடு. " உண்மையானவை எவையோ , கண்ணியமானவை எவையோ, நேர்மையானவை எவையோ, தூய்மையானவை எவையோ, விரும்பத்தக்கவை எவையோ, பாராட்டுதற்குரியவை எவையோ, நற்பண்புடையவை எவையோ, போற்றுதற்குரியவை எவையோ, அவற்றையே மனதில் இருத்துங்கள்." (பிலிப்பியர் 4:18) எனும் வாக்கிற்கிணங்க இறையன்பால் தூண்டப்பட்டு அவரை மனதிருத்தி சரியான வாழ்வு வாழ்வதும் ஒரு வழிபாடே. ஆம், பிரியமானவர்களே! "கடவுளுக்கு உகந்த, தூய, உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள். இதுவே நீங்கள் செய்யும் உள்ளார்ந்த வழியாடு (உரோமையர் 12: 1) ஆண்டவருக்காக வாழ்கிற போது வருகிற பிரச்சனைகள், சவால்கள், போராட்டங்கள், அவமானங்கள் அனைத்தையும் துணிச்சலாய் எதிர்கொண்டு, வாழ்வதே நம்மையே உயிருள்ள பலியாக்குதல், இதனையே "உள்ளார்ந்த வழிபாடு" என பவுலடியார் கூறுகிறார். செபவழிபாடுகளில் பங்கு கொண்டு வழிபடுவதாகக் கூறுதல் சுலபம். ஆனால் வாழ்வையே வழிபாடாக மாற்றுவதுதான் இறைவன் நம்மிடம் எதிர்பார்ப்பது. உதட்டு வழிபாட்டை, வாழ்வைத் தொடாத வெற்றுச் சடங்குகளை இறைவன் வெறுக்கிறார். ( தி.பா 40: 6-8, எசாயா 1: 10-20) அன்பில்லாத, இரக்கமில்லாத, ஒழுக்கமில்லாத, நீதியை விரும்பாத, நேர்மையற்ற, அடுத்தவர் நலனில் அக்கறையற்ற, சுயநலம் கொண்ட மனிதர்கள் தங்களை மாற்றிக் கொள்ளவோ, இறையரசின் மதிப்பீடுகளில் வாழவோ அதற்காக முயற்சி எடுக்கவோ விரும்பாமல் வழிபாடுகளில் மட்டும் கலந்து கொண்டால் அது பயனற்றதே. வாழ்வைத் தொடாத வழிபாடு அர்த்தமற்றதே.

ஆலயங்கள் பூட்டப்பட்ட இந்த இக்கட்டான தருணத்தில், நம் அன்றாட வாழ்வை வழிபாடாக மாற்ற அழைக்கிறார் இறைவன். கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும், சிகரமுமான திருப்பலியை தகுந்த முறையில் கொண்டாட வேண்டுமெனில், நம் வாழ்வு அவருக்கு உகந்த நறுமணம் வீசும் பலியாக, உயிருள்ள பலியாக இருக்க வேண்டும். கிறிஸ்துவின் மதிப்பீடுகளுக்கு முரணான வாழ்வை வாழ்ந்து கொண்டு வழிபாடுகளில் பங்கேற்பது அர்த்தமற்றது.

எனவே. இந்த ஊரடங்குக்காலம் நம்மை ஆன்மீக வாழ்வில் பண்படுத்துகிற காலம். இறைவனை ஆலயத்தில் சந்திக்க ஏங்குகிற நாம், கண்களை அகலத்திறந்து நம் உள்ளங்களில் நம் இல்லங்களில் இருக்கும் அவரை கண்டுகொள்வோம். கீதாஞ்சலியில் தாகூர் பாடுவது போல......

கண் திறந்து பார்....
இறுகிய மண்ணைக்
கீறி விதைக்கும் உழவன்
பாதை அமைக்கக்
கதிரில், மழையில்
கல்லுடைக்கும் தொழிலாளி
இவர்களோடு இருக்கிறான்
இறைவன் புழுதிபடிந்த ஆடை சூடி
( கீதாஞ்சலி 11ம் கவிதை)



நம்முன்னே, நம்மிடையே வாழுகிற இறைவனை சந்திப்பதே வழிபாட்டின் எதார்த்தம். இந்த சந்திப்பில் சாத்தியமாகிய போது, நம் திருவழிபாட்டை உணர்ந்து கொண்டாட முடியும். அதன் உண்மைப் பொருள் விளக்கும் நற்கருணையில் வாழ்கிற இறைவன் நம்மில் வந்து குடிகொள்வார் (யோவான் 14: 23) நாம் அவராகுவோம் "Eat what you are and become what you eat" (நீ எதாக இருக்கின்றாயோ அதனை உண், நீ உண்பது என்னவோ அதாகவே மாறு) என்கிற புனித அகுஸ்தினாரின் வார்த்தைகளை வாழ்வாக்கலாம்.

அருட்பணி. அலெக்ஸாண்டர் , கோயம்புத்தூர் மறைமாவட்டம், தமிழ்நாடு - இந்தியா

அறிவுத்தேவையை விடக் கவனக்குறைவு தான் அதிக கஷ்டத்தை உண்டாக்கி விடுகின்றது. - வின்ஸ்டன்ட் சர்ச்சில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதகுலம் : ஓர் நம்பிக்கைதரும் வரலாறு
# Humankind நூல் ஒரு சிறப்புப்பார்வை

வாழ்க்கையின் பல்வேறு எதிர்மறையான பக்கங்களைப் புரட்டி நமக்கும் கொரோனா பாதிப்பு வருமா? நம் சுற்றாடலிலும் வெட்டுக்கிளி தாக்குமா? நாமும் வேலையின்றி உணவின்றி மாண்டுவிடுவோமா? நம் எதிர்காலம் சூனியமா? என்று கேள்விகளை அடுக்கிக்கொண்டிருக்கும் இத்தருணத்தில் மனித குலத்தின் ஓர் நம்பிக்கை தரும் வரலாறு என்று தனது புத்தகத்தோடு வந்து நிற்கின்றார் The Human Kind: A Hopeful History என்ற நூலின் டச்சு வரலாற்று ஆசிரியர் Rutger Bregman. "மனிதன் தன்னலம் மட்டுமே பெரிது என்று வாழும் சீழ்பிடித்த மனம் கொண்டவன்" என்ற பன்னெடுங்கால எண்ணத்தை மாற்றி மனிதன் அடிப்படையில் நல்லவன் என்பதை வெறும் கூற்றாக போகிற போக்கில் சொல்லி விட்டுப்போகாமல் வரலாற்றில் நடந்த சம்பவங்களை ஆராய்ந்து அதை நிருபித்துள்ளார் இந்த ஆசிரியர். போர்வீரர்களில் ஆரம்பித்து ஸ்டன்போர்ட் சிறைக்கூடங்கள் வரை பலவற்றை தனது தேடலில் உள்ளடக்கும் ஆசிரியர் இவற்றின் உதவியுடன் தன் கூற்று சரியென நிறுவ முயன்றுள்ளார். Amazon Kindle Store ல் டிஜிட்டல் புத்தகமாக டச்சு மொழியின் ஆங்கில மொழிபெயர்ப்பான இதைப்படித்தபோது ஏற்றபட்ட நம்பிக்கை உணர்வை உங்களுக்குள்ளும் கடத்தும் ஆர்வத்தில் இச்சிறு பகிர்வை எழுதுகிறேன்.

இப்புத்தகத்தில் உள்ள ஒரு உதாரணம் "Lord of the Flies" என்ற தலைப்பில் 1954ம் ஆண்டு வில்லியம் கோல்டிங் (William Golding) என்னும் எழுத்தாளர் வெளியிட்ட சிறுவர் நாவலைத் தொடர்ந்து வருவதாகும். இந்நாவல் மனிதர்கள் எப்போதும் தீயதையே உற்பத்தி செய்வார்கள் என்ற நாம் எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கும் எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. அதனால் அதிகபிரதிகள் விற்று சாதனையும் செய்தது. ஆள்நடமாட்டமற்ற ஒரு தீவில் மாணவர்களைச் சுமந்துசென்ற ஒரு விமானம் இயந்திரகோளாறினால் விழுந்து விடுகிறது. அதில் எஞ்சுபவர்கள் சிறுவர்கள் மாத்திரமே. இப்போது அவர்களே அக்காட்டிற்கு அரசர்கள். அவர்களுள் ரல்ப் (Ralf) எனும் சிறுவன் சில முடிவுகளை அறிவிக்கிறான் அதன்படி விளையாடுங்கள், தற்காத்துக்கொள்ளுங்கள், தீயை உருவாக்கி அதன் புகையினால் நம்மைக்கடந்து செல்லும் கப்பல்களுக்கு நாம் இங்கிருப்பது குறித்து தெரிவியுங்கள் என்பனவாகும். விளையாடுவதற்கு விதிகள் தேவையில்லை. ஆனால் தீயை உருவாக்க, தற்காத்துக்கொள்ள விதிகளைப் பின்பற்ற வேண்டும். கதையின் படி நடந்ததோ வேறு. அச்சிறார்கள் தங்களுக்குள்ளே அடித்துக் கொண்டார்கள். தமக்குள்ளே கேலி செய்து சில சிறார்களை கொலையும் செய்கிறார்கள். இறுதியில் ஒரு கப்பல் மாலுமி அந்த தீவை அடைந்த போது அந்தத் தீவையே பயனற்றதாக மாற்றியிருந்தார்கள் அந்த சிறார்கள். "நாங்கள் எங்கள் குழந்தை தன்மையை இழந்துவிட்டோம்" என்று ரல்ப் அழுவதாக இந்த நாவலின் கற்பனைக் கதை நிறைவுறுகிறது. மொத்தத்தில் மனிதர்கள் சுயநலம் மிக்கவர்களாக அழிவையே ஆக்குகிறார்கள் என்ற செய்தியை வில்லியம் கோல்டிங் இந்த நாவல் வழியாக சொல்லியிருப்பார்.

இதே எண்ணத்தில் உருவாகி இன்று அனைவராலும் பேசப்படுவதுதான் BIGG BOSS என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியும். அங்கும் இப்படித்தான் மனிதர்கள் தனித்த ஒரு இடத்தில் சேர்ந்து இருக்க விடப்பட்டால் அங்கு சண்டையும் ஒருவர் ஒருவரை தாக்கும் நிகழ்வும்தான் நடைபெறும். அதை நெறிப்படுத்தும் கமலஹாசனாக இருக்கட்டும் பார்க்கும் பார்வையாளராக இருக்கட்டும் நம் எதிர்பார்ப்பு என்ன இன்று யாருக்கிடையே சண்டை வரும்? அப்படி சண்டையே வராவிட்டால் இவர்கள் உண்மையாக இல்லை இவர்கள் நடிக்கிறார்கள் என்று சொல்லும் நடிகர் கமலஹாசனோடு சேர்ந்து நாமும் தலையாட்டுவோம். இந்த மனிதன் குறித்த எதிர்மறைக் கோட்பாட்டை உதாரணத்தோடு தன் நூலில் போட்டு உடைத்துள்ளார் எமது நூலின் ஆசிரியர் ப்ரக்மன்.




உண்மையிலேயே ஒரு தீவில் சிறுவர்கள் மாட்டிக்கொண்டால் இவ்வாறுதான் நடக்குமா? நம் மனித வரலாற்றில் கடந்த நூற்றாண்டில் இப்படியான சம்பவம் ஒன்றும் நடைபெறவில்லையா என்று தேடத்தொடங்கினார் ப்ரக்மன். அவருக்கு கைகொடுத்தது இணைய வெளி. அதில் அவர் 1966ம் ஆண்டு அவுஸ்திரேலிய செய்தி நிறுவனமான "The Age" வெளியிட்ட ஒரு நிகழ்வை கண்டு மகிழ்ந்தார். ஏனெனில் அவர் தேடியது போலவே அச்செய்தியும் ஒரு தீவில் உண்மையாகவே மாட்டிக்கொண்ட 6 சிறுவர்களைக் பற்றிப் பேசியிருந்தது. பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்துகொண்டிருந்த 6 மாணவர்கள் படகு ஒன்றை எடுத்துக்கொண்டு கடல் சுற்றிப்பார்க்கச் செல்கிறார்கள். ஆனால் அமைதியான பயணம் சிறிது நேரத்திலேயே ஆபத்தானதாக மாறுகிறது. காற்றின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாத படகு மாணவர்களின் கட்டுப்பாட்டை மீறி தாறுமாறாகச் சென்று ஓர் ஆள் நடமாட்டமற்ற தீவில் இரவின் இருட்டில் மாணவர்களை கரைசேர்க்கிறது. தாம் தொலைந்துபோயுள்ளோம் என்பதை சிறுவர்கள் உணர்ந்துகொண்டார்கள். ஆனால் The Lord of the Flies கதையில் வந்ததைப் போல் நிஜத்தில் நடக்கவில்லை.



சொல்லப்போனால் வில்லியம் கோல்டிங்கின் கற்பனைக்கு எதிர்மாறாகவே அனைத்தும் நிஜத்தில் நடந்துள்ளதை அவதானித்த ப்ரக்மன் அங்கு ஏற்பட்ட ஆரோக்கியமான மாற்றத்தை அவர்களைக் காப்பாற்றிய அவுஸ்திரேலிய கப்பல் தலைவர் பீற்றர் வோர்னர் மகிழ்ச்சியோடு பகிர்ந்ததைச் சொல்கிறார். 1965 ஆனி மாதம் தொலைந்து போன அவர்களை பீற்றர் வோர்னர் அந்த ஆள்நடமாட்டம் இல்லாத தீவில் 1966 புரட்டாதி 11ம் திகதி சந்தித்தபோது அங்கு மரப்பட்டைகளை வைத்து தண்ணீர் சேமிக்கும் இயந்திரம், தொடர்ச்சியாக எரியும் தீ, ஒரு Batmintton விளையாட்டுத் திடல், சில தீவில் காணப்பட்ட பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஜிம் என்று பல பொருட்களைக் கண்டார்.

இவ்விபரங்களை ப்ரக்மன் சேகரித்த போது அவருக்கு கிடைத்த இன்னுமொரு மகிழ்ச்சியான செய்தி அந்த கப்டன் பீற்றர் வோர்னரும், காப்பாற்றப்பட்ட மாணவர்களில் ஒருவரும் இன்னும் உயிருடன் இருப்பதுதான். அவர்களைச் சந்தித்த ப்ரக்மன் கேட்ட முதல் கேள்வி நீங்கள் "The Lord of the Flies" வாசித்திருக்கிறீர்களா? என்பதுதான்.

சுயநலம் மிக்கவராக வாழப்பழகியுள்ள மனிதர் நாம் அடுத்தவரை துன்புறுத்துவதில், நம் ஆசைக்காக, பாதுகாப்பிற்காக, நம்மைச் சுற்றியுள்ளவற்றை அழிப்பதிலே தான் கவனமுடையவர்கள் என்ற எண்ணத்தை மாற்றி அடிப்படையில் மனிதனாய்ப் பிறந்துள்ள நாம் எல்லோரும் நல்லவர்களே என்ற நம்பிக்கை டொனிக் தரும் இந்நூலை இக்காலத்தில் கொண்டாடாமல் எப்படி இருக்க முடியும்.

நாகரீக வாழ்க்கையில்தான் மனிதன் தன்னை ஒழுங்குபடுத்திக்கொண்டான் என்ற கருத்தை பிரெஞ்சு அறிஞர் ஜீன்-ஜேக் ரூசோவை மேற்கோள்காட்டி மறுத்துரைக்கிறார் நம் நூலின் ஆசிரியர். நாகரீகத்திற்கு முன்னரான வாழ்க்கையில் ஹேறாமோ சேப்பியன்களாகிய நாம் மகிழ்ச்சியாகவே வாழ்ந்தோம் என்கிறார். நம்மை விட பலசாலிகளாகவும், புத்திசாலிகளாகவும் இருந்தவர்கள் நியாண்டதால்கள் ஆனால் அவர்களால் குழுவாக செயற்பட முடியவில்லை அதனால் அவர்கள் அழிவைச் சந்தித்தார்கள். ஆனால் ஹேறாமோ சேப்பியன்களாகிய நாம் சமூக கற்றலில் (social learning - ஒரு விடயத்தை கவனித்து பிரதியெடுத்தால் போல் செயற்படுதல்) மிக வல்லவர்கள். அதனாலேயே நாம் தப்பிப்பிழைத்துள்ளோம் என்று நம் மனிதகுலத்தின் நன்மையை நற்குணத்தை நம்பிக்கை தரும் எதிர்காலம் என்ற அடைமொழியோடு தன் நூலில் ஆணித்தரமாக பதித்து நிற்கிறார் Rutger Bregman. ஒரு நல்ல நூலை படிக்க கிடைத்த மகிழ்ச்சி உங்களுக்கும் வேண்டுமானால் தற்போதைக்கு ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள இந்நூலை எடுத்துப்படியுங்கள்.

பணி. டக்ளஸ் ஜேம்ஸ்

## இறைவனே துணைபுரிய வேண்டும்



எங்கும் கொரோனா
எதிலும் கொரோனா
எண்ணற்ற மனிதர்களை
இனங்காண முடியாமல்
அள்ளி அணைத்து விட்ட
அதீத வடிவமொன்று

உலகின் பல இடமும்
இக்கொடிய நோயினால்
வாடி உறங்கிவிட்ட
வேதனையின் நிலைகள் பல
இக்கொடிய நிலை நீங்க
இறைவனே துணை புரிய வேண்டும்
இறைவனின் துணையாலன்றி
இத்துன்பம் மறையவே மறையாது


வேண்டுவோம் ஒன்றாய்ச் சேர்ந்து
உலகமே அமைதியைக் கண்டடைய
இக்கொடிய நிலையின்
அழிவினை ஒழித்து விட
இறைவனே துணைபுரிய வேண்டும்
ஒன்றாகுவோம் ஒன்றாகி நின்றே
இக்கொடிய நிலை
மறைய வேண்டுவோமே

Fr. N.C. அருள்வரதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மகிழ்ச்சி என்ற உணர்ச்சி இல்லாவிட்டால் வாழ்க்கை சுமக்க முடியாத பெரிய சுமையாகிவிடும்." - பெர்னாட்ஷா

# கொரோனாக் கால தனிமை ஓர் அர்த்தமுள்ள ஏகாந்தம்



எப்போதும் பரபரப்பாக ஓய்வின்றி ஓடிக்கொண்டிருந்த மனித சமூகத்திற்கு வேகத்தடைதாக வந்து சேர்ந்ததுதான் இந்தக் கொரோனா என்கின்ற உலகக் கொள்ளைநோய். அண்டசராசரத்தையும் அடக்கி ஆள முயற்சிக்கும் மனித கரங்களில் சிறிதும் சிக்காத, பார்வைக்குகூட தென்படாத நுண்ணங்கிதான் இந்த Covid-19 வைரஸ். இன்று மனித குலம் தன் அறிவு ஆற்றலின் உச்சகட்ட வளர்ச்சியை ஆராய எடுத்த சிறிய துரும்பு திரும்பி அதனையே குத்திக் கிழிக்கிறது. லட்சங்களைத் தாண்டியும் முடிவின்றி நீள்கிறது உயிரிழப்பு எண்ணிக்கை. வேற்றுக்கிரகங்களில் வாழ முற்படும் மனிதன் இன்று இந்த அற்பமான நுட்பமான கிருமியின் தாக்குதலுக்கு முகங்கொடுக்க முடியாமல் நிலைகுலைந்து நிற்கின்றான். மருந்து கண்டுபிடிக்க முடியாமல் தளர்வுடன் சோர்ந்து போய் இன்றுவரை பலி கொடுத்துக்கொண்டுதான் இருக்கின்றான். இது இயற்கையின் சீற்றம், உள்ளக்குமுறல் என்றால் அது மிகையாகாது.

அழகான உலகம், ஆண்டவன் கைவரைந்த அருமையான படைப்பு. அதனைப் பாதுகாத்து விருத்தி செய்து மகிழ்வோடு வாழ வேண்டும் என்பது இறைவன் மனிதகுலத்திற்காய் வரைந்த திட்டம். கண்களைக் கவரும் இயற்கையின் எழில், உள்ளங்களை வருடச்செய்யும் பாச இணைப்புக்கள் இதுதான் இவ்வுலக வாழ்வின் நியதி. ஆனால் மனிதன் தனது சுயநலப்போக்கினால் இயற்கையை அழித்து, அபிவிருத்தி என்னும் பெயரில் அருகிவரும் மிருகங்களையும் தாவரங்களையும் அவற்றின் வாழ்விடங்களிலிருந்து பிடுங்கி எறிந்தான். அவற்றின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் பறித்தான். இயற்கை வளங்களைச் சுரண்டி, சூறையாடி தன்னை செல்வந்தன் என்று அழைத்துக்கொண்டான். திருவிவிலியத்தில் நல்ல சமாரியன் எனும் உவமையில் வரும் வழிப்போக்கனைப் போன்று இன்று எம் பூமித்தாய் பேராசை கொண்ட மனித மிருகங்களினுடைய கரங்கிளில் அகப்பட்டு ஆடைகள் உரியப்பட்டு கொடூரமாய்த் தாக்கப்பட்டு குற்றுயிராக விடப்பட்டுள்ளாள்.

ஆம்! எம் சிந்தனையில் பார்வையில் நாம் மாற்றத்தைக் கொண்டுவர எமக்குக் கிடைத்த சந்தர்ப்பம் தான் இந்த கொரோனா தந்த ஏகாந்தம் ஆகும். இதை நான் ஏகாந்தம் என்று அழைக்கிறேன் ஏனெனில் இது வெறும் அர்த்தமற்ற தனிமையல்ல. நம் நிலையயை நம்மைச் சுற்றியுள்ளவற்றின் நிலையை நாம் அறிந்துகொள்ள நம் மனநிலையை செயற்பாட்டை சிந்தித்து மாற்றிக்கொள்ள கொடுக்கப்பட்ட ஓர் அற்புதமான காலமாகும்: தன்னிலை சோதித்தறியும் ஏகாந்த நிலையாகும். இது ஒரு எதிர்பாராத முடக்கம். முழு உலகமே இதற்கு அடிபணிந்து ஏகாந்த நிலைக்குத் தன்னைக் கொடுத்துள்ளது. மானிடம் பாதுகாப்பு தேடி வீட்டிற்குள் அடைபட்டிருக்க இயற்கை முழுச்சுதந்திரத்தோடு தனது தூய்மையான உயிர் சுவாசக்காற்றை சுவாசிக்கின்றாள். பறவைகள் எவ்விதமான அச்சமுமின்றி நீலவானில் சிறகடித்து பறக்கின்றது கடல்வாழ் உயிரினங்கள் பூமியை எட்டிப்பார்த்து அதன் அழகையும் அமைதியையும் இரசிக்கின்றன. ஒரு ஆங்கிலக் கவிதையாசிரியர் பின்வருமாறு கூறுவார். மனிதர்கள் அனைவரும் கூட்டில் அடைக்கப்பட்ட பறவை போல உள்ளார்கள். (Human being are like caged bird). ஆனாலும் உலகம் படைப்பின் ஒழுங்கின்படி ஒழுகுகிறது. இது ஒரு மீள் படைப்பு போல் இருக்கிறது.

> நீ உறுதியாக இருக்க வேண்டுமெனில் தனிமையில் இருப்பதை கற்றுக்கொள்

முகத்தையே கவசமாக்கி முகமூடி மனிதர்களாய் வெறும் பற்களால் மட்டும் சிரிக்க முயன்றவர்கள் இன்று முகக்கவசங்கள் அணிந்து கொண்டு உள்ளத்தின் ஆழத்திலிருந்து பேச விரும்புகின்றார்கள். சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றம் தந்த பயத்தினால் இன்று எல்லோரும் தனிமையை ரசிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஆன்மீக வாழ்வு கசப்பாகி இறைவன் இருக்கின்றாரா என்று கேள்வி கேட்டு வாழ்ந்தவர்களும், வற்புறுத்தலினால் ஆலயம் சென்றவர்களும், ஆலயம் செல்லும் நேரத்தை வேறு விடயங்களுக்குப் பயன்படுத்தி நேரம் இல்லை என சாக்குப்போக்குச் சொன்னவர்களும் என்று அனைத்து வகையினரின் வாழ்வையுமே ஆட்டம் காண வைத்து விட்டது இந்த கொரோனா வைரஸ்.

இறைவனைத் தேட நேரம் இல்லாமல் அலைந்த போது ஆலயங்கள் திறந்து இருந்தன. வழிபாடுகளும் நடந்தேறின. ஆனால் இன்று இறைவனைத் தேட நினைக்கும் போது ஆலயங்கள் மூடப்பட்டுள்ளன. திருப்பலியையும் அருட்சாதனங்களையும் பெற்றுக்கொள்ள ஏங்கும் போது அவை இல்லாத ஓர் வெறுமையுணர்வு உள்ளங்களை நிரப்பியுள்ளது.

ஆனாலும் குடும்பங்களாக ஒன்றித்து செபிக்கும் சிறு செயல் இத்தனை வெறுமையிலும் ஓர் ஒளிக்கீற்றை நமக்கு காண்பிக்கிறது. நம்பிக்கை வாழ்வு புது வழியில் வலிமை பெறுவதை நாம் அவதானிக்க கிடைக்கிறது. அன்று திருவிவிலியத்தில் பழைய ஏற்பாட்டில் இறைவன் மக்களோடு இயற்கையினூடாக பேசினார். இன்று நாமும் இயற்கையை நேசிக்க ஆரம்பித்து எம் சுற்றுப்புறச் சூழலை சுத்தம் செய்து தோட்டங்கள் அமைத்து வாழ கற்றுக் கொண்டுள்ளோம்.


நம் ஏகாந்த நிலையில் சுற்றுச் சூழலில் வாழும் அதன் வழிபேசும் இறைவனை சுவைத்துப்பார்க்க நாம் அழைக்கப்படுவதை உணர்கின்றோம். ஆன்மீகம் என்பது எம்மை நாம் தனிமையில் இருந்து சுயபரிசோதனை செய்வதே என்று கற்றுக் கொண்டிருக்கின்றோம். அதைவிட மேலாக பெற்றோர் தம் பிள்ளைகளுடன் அதிக நேரம் செலவிட சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. திருத்தந்தை பிரான்சிஸ் தனது " அன்பின் மகிழ்ச்சி " என்ற திருத்தூது ஊக்கவுரையில் சொல்வார், “பெற்றோர் தங்கள் குழந்தைகள் அடிப்படை அறிவைப் பெற்றுக் கொள்ள பாடசாலைகளைச் சார்ந்து இருக்கிறார்கள். ஆனால் தங்களுடைய பிள்ளைகளின் அறநெறி உருவாக்கத்திற்கான பொறுப்பை ஒரு போதும் அடுத்தவரிடம் முழுமையாக விட முடியாது” இதனால்தான் இந்த தனிமைப்படுத்தலை தனி மனிதனுக்கு மட்டுமல்ல முழுக்குடும்பத்திற்குமே புதுவாழ்வளிக்கும் ஏகாந்தமாக நான் காண்கின்றேன்.

Lowrenco Freeman என்னும் ஆங்கில எழுத்தாளர் கூறுவார் “எனது தனித்துவத்தைக் கண்டு பிடிப்பதற்கும் ஏற்றுக் கொள்வதற்கும் அத்தியாவசியமானது தனிமையே” இன்று உலகமும் ஏகாந்தத்தை நேசிக்க ஆரம்பித்து விட்டது. கட்டாய தனிமைப்படுத்தலானது மனித சட்டதிட்டங்களுக்குட்பட்டது. நாம் எமது மனசாட்சியின் குரலுக்கு செவிமெடுத்து எம்மையே நாம் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தி சிந்திக்க ஆரம்பித்து விட்டோம். அந்த சிந்தனையின் விளைவு எமது ஆன்மீகப் பயணத்தின் மீள் எழுதலாகும். எனவே

உண்மையான மனிதன் பிரச்சனையில் சிந்திக்கின்றான்
துன்பங்களில் மனத்திடனை சேகரிக்கின்றான்
சிந்திப்பதில் வளர்ச்சியடைந்து துணிவு கொள்கின்றான்

**அருட்சகோதரி. இயூஜின் வாத்லட். HF**

தனிமையை நேசிப்போம் அந்த தனிமையில் இறைவனின் அன்பை உணர்வோம் பகிர்வோம், மகிழ்வோம்.



ஆடம்பர ஆலயங்களையும்
ஆரவார வழிபாடுகளையும்
துறந்து
தேவனைத் தெருவுக்கு
மீண்டும் கொண்டு வந்து
உண்மை விசுவாசியை
சந்திக்க வைத்த
கொரோனாவுக்கு நன்றி!

## தீபத்தின் ஒளியில் பகுதியில்...

பாலையூற்று திரு. அல்பேர்ட் அவர்களின் **வழிபாடு தொடர்பான கேள்விகளுக்கு** ஆவணி 2020 இதழில் பதிலளிக்கிறார்,

**அருட்பணி. இ. யூட் சர்வாணந்தன்**
இயக்குனர்
திருகோணமலை மறைமாவட்ட திருவழிபாட்டு ஆணையம்.





மேலும் உங்கள் கேள்விகளை ***தீபத்தின் ஒளியில்*** பகுதிக்கு எழுதி அனுப்ப வேண்டிய முகவரி,

e-mail – theepamlink@gmail.com
Messenger - திருமலை தீபம்
Post – திருமலை தீபம்
திருமறைக்கல்வி நடுநிலையம்.
297, டொக்கியாட் வீதி,
திருகோணமலை

**இந்த உலகமே உன்னைத் திரும்பிப் பார்க்க வேண்டுமென்றால் நீ யாரையும் திரும்பிப் பார்க்காதே...!!!! - ஹிட்லர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100 ஆண்டுகளைக் கடக்கும் புனித மரியாள் பேராலய உயிர்த்த ஆண்டவர் திருச்சுரூபம்

திருமலை மறைமாவட்டத்தின் புனித மரியாள் பேராலயத்திலுள்ள உயிர்த்த ஆண்டவர் திருச்சொருபத்திற்கு இவ்வருடம் (100)-நூறு வயது என்பதை எண்ணி திருமலை மறைமாவட்டமும் பேராலயப் பங்கும் சிறப்பாக கஸ்மிர் குடும்பமும் மகிழ்வுடன் பூரித்து நிற்கின்றது.




புனித மரியாள் பேராலயப் பங்கை சார்ந்த திரு.மு.மரியாம்பிள்ளை மனுவேல், மேரிகிளாரா தம்பதியினருக்கு திருமணமாகி நீண்ட ஆண்டுகளின் பின்பு சிரேஸ்ட மகன் கஸ்மிர் 04-03-1920 இல் மலர்ந்ததின் நன்றியாக குறித்த தினத்திலே முழுமையான மரத்தினால் எவ்வித இணைப்புகளுமின்றி இச் சுருபத்தை செதுக்கிய தந்தை மரியாம்பிள்ளை மனுவேல் தனது மகன் கஸ்மிருக்கு திருமுழுக்கு திருவருட்சாதனம் வழங்கப்பட்டபோது அதாவது உயிர்ப்பு பெருவிழா தினத்தன்று (20.04.1920 இல்) பேராலயத்திற்கு நன்றியின் காணிக்கையாக இச் சுருபத்தை கையளித்தார். அக்காலப்பகுதியில் பேராலய பங்குத்தந்தையாக இயேசுசபைக் குரு அருட்பணி லியோன்டு பொன் என்பவரும், ஆயராக அதி வண (Gaston Robichrs) கஸ்ரன் றொபிச்செஸ் அவர்களும் பணியாற்றினார்கள்.

மேலும் இவ் உயிர்த்த ஆண்டவருக்கான ஆடை,கொடி யாவும் இந்தியாவில் (கோவா) இருந்து கொண்டு வரப்பட்டது. இப்பொதியை எடுத்துவர திரு மு.ம.மனுவேல் கொழும்புக்குச்சென்று திரும்பும் வழியில் பெரும் சூறாவளியில் அகப்பட்டு வள்ளம் நீரில் மூழ்கியபோதும் (100 ஆண்டுகளுக்கு முன்பு கடல் மார்க்கமாகவே கொழும்பு நகருக்கு பயணிக்க வேண்டிய சூழ்நிலை இருந்துள்ளது. இவர் சூறாவளியின்போது நீந்தி) காக்கை தீவுக்கரையை வந்தடைந்து இறுதியாக இல்லத்திற்கு வந்து சேர்ந்தார் இது அவரது விசுவாசத்திற்கும் ஆண்டவரின் இரக்கத்திற்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

உயிர்த்த ஆண்டவர் இயேசுவின் ஆசீர்வாதத்தை எண்ணி திருமலை மறைமாவட்டமும் சிறப்பாக பேராலயப் பங்கும் பெருமகிழ்வு அடைகின்றது அவர்களுடன் சேர்ந்து கஸ்மிர் குடும்பமும் பூரித்து நிற்கின்றது.

**கஸ்மிர் குடும்பத்தினர்**
**மன்னார்**

## உரை விளக்கம்
## "அகத்தின் அழகு"
FR. NC

ஒரு குடும்பத்திலே இரண்டு பிள்ளைகள் இரண்டும் பெண்பிள்ளைகள். இருவரின் குணங்களைப் பார்த்தால் இளையசகோதரி எல்லாரோடும் அன்பாக பழகுபவர். நன்றாகக் கதைப்பார். தன்னால் முடிந்த உதவிகளை முடியாதவர்களுக்குச் செய்வது அவரது இயல்பாகும். எப்போதும் முகத்திலே ஒரு புன்னகை.

ஆனால் மூத்த சகோதரியைப் பார்த்தால் முகத்திலே ஒரு துளி கூடச் சிரிப்பே கிடையாது. எல்லாரோடும் அடிரா புடிரா என்று தான் ஆவேஷமாக இருப்பார். அகம் சரியாக இருந்தால் முகம் சரியாக இருக்கும் முகம் அதனைப் பிரதிபலித்துக் காட்டும். அகம் சரியாக இல்லா விட்டால் முகம் அதனைக் காட்டிவிடும்.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதை இவர்களில் அறிய முடிகின்றதல்லவா.






# அன்றாட வாழ்வில் தத்துவங்கள்

### 12. ஒழுங்கும் கட்டுப்பாடும்

உயிர் வாழ்வின் நன்மைக்காகப் பெரியோரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நன்நடத்தையே ஒழுங்கு எனலாம். அல்லது மற்றவர்களது நன்மைக்காகத் தனது சுதந்திரத்துக்குத் தான் போடும் கட்டுப்பாடே ஒழுங்கு எனலாம். இதனை ரயில் தண்டவாளத்துக்கு ஒப்பிடலாம். புகையிரதம் பக்கவாட்டில் இரு பக்கமும் ஓடாமல், முன்னோக்கிச் செல்வதற்கு இரு தண்டவாளங்கள் இருப்பது போன்று எமது வாழ்விலும் எமது வாழ்வை முன்னெடுத்துச் செல்லவும். மற்றவர்களின் சுதந்திரத்திற்கு மதிப்புக் கொடுக்கவும், எமது வாழ்வில் நாம் போடும் வரம்பாகும்.



காலையில் எட்டு மணிக்குப் பாடசாலை தொடங்குகிறது. மாணவர்கள் நேரம் பிந்தி வரக்கூடாது. பாடசாலைச் சீருடையில் வர வேண்டும். வகுப்பினுள் ஆசிரியர் நுழைந்தவுடன் எழுந்து வணக்கம் சொல்ல வேண்டும். இவை பாடசாலையின் ஒழுங்குகள்.



வீதியில் வலது பக்கத்து வாகனத்திற்கு இடம் கொடுப்பது, வீதியின் வலது பகக்மே நடப்பது, குறிப்பிட்ட இடத்தில் வீதியைக் கடப்பது, வீதி விதிகள் இவை, வீதியில் அனுசரிக்கும் ஒழுங்குகள். எனவே தனி மனித நல்வாழ்வுக்கும்.

சமூகத்தின் பொதுநலனுக்கும் மனிதன் வகுத்துக் கொண்ட விதிமுறைச் சட்டத் திட்டங்களையே ஒழுங்குகள் என்கிறோம். ஒழுங்குகளைக் கடைப்பிடிப்பவன் ஒழுங்குள்ளவன் எனலாம். ஒழுங்குகள் எல்லாருக்கும் பொதுவானவையல்ல. அவரவர் வாழ்க்கை நிலைக்குத்தக்கபடி ஒழுங்குகள் வேறுபடலாம். ஆனால் ஒழுக்கம் என்னும் பண்பு எல்லோரும் போற்ற வேண்டிய உயர்ந்த குணமாகும். இடம், பொருள், காலம், பழக்க வழக்கங்கள், பண்பாடு மாறலாம். எனினும் ஒவ்வொருவனும் ஏதேனும் ஓர் ஒழுங்கு முறைக்குக் கட்டுப்பட்டு வாழ்வதை ஒழுக்கமுள்ள வாழ்க்கை என்கிறோம்.

ஒழுக்கம், உயிர், ஏனைய பொருட்கள் யாவற்றிலும் சிறந்தது என்பதால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும். அதாவது உயிரையும் விட ஒழுக்கத்தை உயர்வாகப் போற்ற வேண்டும் என்றார் வள்ளுவர். உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடு கருதாமல் ஒழுக்கமுடையோர் உயர்வு அடைகிறார்கள் என்பதால் அதை விழுப்பம் என்கிறார்.

ஒருவன் தன் சொந்த நலனுக்கென்று தனக்கு மட்டும் ஏற்படுத்திக் கொள்ளும் ஒழுங்குகள் சுய ஒழுங்குகள் ஆகும். வெள்ளிதோறும் விரதம் இருப்பேன், ஏனெனில் அது பக்தி உணர்வை வளர்க்கும்.



தேர்வுக் காலத்தில் அதிகாலையில் எழுந்து படிப்பேன். ஏனெனில் அது அதிக மதிப்பெண்களைப் பெறுவதற்கு உதவுகின்றது.



புகை பிடிக்க மாட்டேன், பிடித்தால் சொற்ப காலத்திற்குள் இறக்க நேரிடலாம்.

இவ்வாறு பலரும் பல சுய ஒழுங்குகளைத் தன்னலத்திற்கேற்றபடி அமைத்துக் கொள்ளுகின்றனர்.

மனிதன் தனியாகவே பிறக்கின்றான். ஆனால் வாழும்போது பிறரோடு கூடியே வாழ்கின்றான். அக் கூட்டு வாழ்வையே சமுதாய வாழ்வு என்கின்றோம். அச் சமுதாயம் கட்டுக் குலையாமல் இருக்கவும், தனிமனிதன் தன்மானம் இழக்காதிருக்கவும் சமுதாயம் சில ஒழுங்கு விதிகளை ஏற்படுத்தியுள்ளது. அதையே சமூக ஒழுங்கு என்கிறோம்.

ஒழுங்கு எமது எண்ணத்தில் வேண்டும். நல்ல எண்ணம் உள்ளவனுக்கு உலகம் நல்லதாகத் தோன்றும். எமது மனதைக் குரங்கு போன்று அலைய விடாது ஒருநிலைப்படுத்துவது சிறந்தது. அவ்வாறே நாம் செய்யும் காரியம் எதுவானாலும் அதற்குச் சரியான காரணம் இருக்க வேண்டும். அது தனிமனிதனுக்கு நன்மையாயும் பொது நலனுக்கு உகந்ததாயும் இருக்க வேண்டும்.

ஒழுங்குமுறை வகுக்கப்பட்டால் மட்டும் போதாது, அதற்கு அடங்கி நடப்பவர்கள் உருவாக வேண்டும். ஒழுங்கு முறைகளை ஏற்று அவற்றிற்குக் கட்டுப்பட்டு ஒழுகுதலையே கட்டுப்பாடு என்கிறோம்.

சுயகட்டுப்பாடு, சமூகக் கட்டுப்பாடு என இரண்டு உள்ளன. சீனி வியாதி உள்ளவன் தனக்குச் சில கட்டுப்பாடுகளை விதித்து சில உணவுகளை உண்ணாமல் தனது சுய நன்மைக்காகக் கடைபிடிக்கிறான். அதேபோன்று சமூகக் கட்டுப்பாடுகளும் உண்டு. இவைதான் சட்டமாக்கப்படுகின்றன. சட்டத்தை மீறும் போது அது பொதுநலனுக்குத் தீங்கு விளைவிக்கும் என்பதால் நீதிமன்றங்களில் தண்டனை பெறுகிறார்கள்.

ஆகவே எமது வாழ்வு ஒழுங்கும் கட்டுப்பாடும் உள்ள வாழ்வாக மலரட்டும்.

> உண்மையாக நடப்பதால் துன்பங்கள் குவிகின்றன என்பதற்காகப் பொய் வாழ்வைத் தேடாதே, நிலைத்து நில்லா பெரிய மணல் மேடுகளை விட நிலைத்து நிற்கும் சிறு கற்பாறைகளைத் தெரிந்தெடு.

தொடரும்.........

நன்றி.

"கஷ்டத்தை அனுபவிக்காமல் எந்தவொரு மனிதரும் அவரது இலட்சியத்தை அடைய முடியாது." - காமராஜர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# COVID 19 VS விசுவாசிகள் 2020 (யாவும் கற்பனை அல்ல)

## CORONAVIRUS (COVID-19) AND THE CHURCH

அருட்பணி. ஜீலியன்
மட்டக்களப்பு மறைமாவட்டம்

❖ இந்த பழாய்போன 2020 யாருடைய கண்ணுல முழித்ததோ தெரியாது கொரோனா தொடங்கி வெட்டுக்கிளி வரைக்கும் தொடர்கிறது பிகில் திகில்...

❖ கடவுள் மனிதரிடையே வேற்றுமை பாராட்டுவதில்லை கொரோனாவும் மனிதரிடையே வேற்றுமை பாராட்டவில்லை. சப்பை மூக்கில் ஆரம்பித்து தொப்பை மூக்குவரை இன, மத மொழி பாகுபாடின்றி அனைவரையும் போட்டுத்தாக்கி வருகிற ஓர் அருவ ஆசாமி

❖ கொரோனாவின் நன்மை தீமைகளை பட்டியலிட்டால் உலகமே தாங்காது ஆதலால் நம்ம வீட்டுப்பிரச்சனையை மட்டும் இப்போதைக்கு ஆராய்வோம்.
அதிலும் விஷேசமாய் நாடே முடக்கப்பட்டதால் திருப்பலி பூசைகள் இல்லாமல் விசுவாசிகளின் அல்லாட்டைத்தைக் கொஞ்சம் அலசலாம்.

❍ 'அவனின்றி அணுவும் அசையாது' என்பதில் அதி சூர நம்பிக்கை கொண்டவன் நான். ஒவ்வொரு நிகழ்வினூடாகவும் ஆண்டவன் எதையோ நமக்கு கற்பிக்க விளைகிறார். அவ் வகையில் கொரோனாவில் இருந்து நாம் எதைக் கற்கப்போகிறோம்??????

❍ கொரோனா நாட்களில் அதிகம் கேட்கப்பட்ட கேள்வி: "எப்ப பாதர் பூச தொடங்கும்?"
அடித்துச் சொல்கிறேன் இதே ஆசாமிகள் தான்
" எப்ப பாதர் பூசைய முடிப்பீங்க" ? என்று வெளிப்படையாகவும்
இந்த மனுஷன் எப்ப தான் பூசை முடிப்பாரோ என மனசுக்குள்ளும் கேட்டவர்கள்.

❍ " ஐயையோ! பாதர்
இவ்வளவு நாளாக நற்கருணை எடுக்காம உடம்புக்கு என்னமோ செய்யுது
ஐயையோ மக்காள்,
இவ்வளவு வருஷமா நற்கருணை எடுத்தீங்களே, ஆன்மாவுக்கு எதுவும் செய்ததா? செய்திருந்தால் சந்தோஷம்!!!!!

❍ பூசைக்கு போகாம பதிலெல்லாம் மறந்து போச்சு பாதர்" - " உங்கட வாய்க்குள என்ன கொளுக்கட்டையா வச்சிரிக்கீங்க? வாயைத் திறந்து பதில சொல்லுங்களேன் மக்களே" பல பங்குச்சாமியாரின் குரல்கள் என் காதுகளைக் குடைகின்றன.

❍ "ஐயகோ! நற்கருணையை எப்படிக் கையில வாங்குவது? அசுத்தமான கைகளே பாதர்"
மை டியர் பீப்பிள், வாயில வாங்கும் போது எத்தனை பேர் புறணி பேசாத, தூஷணம் கதைக்காத, கோள்மூட்டாத, போட்டுக் கொடுக்காத, தூற்றாத, குசு குசுக்காத.... வாயால வாங்கீனிங்க???
ஆழரவா றயளா போட்டு வாய கழுவின உங்களுக்கு பாவசங்கீர்தன wash ஆல ஆன்மாவ கழுவ முடியலியே கழுவியிருந்தா மகிழ்ச்சி ...

❍ கிறிஸ்மஸ் கிறிஸ்தவருக்கும், பெரிய வெள்ளி கிறிஸ்தவருக்கும் ( இந்த இரண்டு தினங்களிலும் மட்டும் பூசைக்கு வருபவர்கள்) மனசுக்குள்ளே மத்தாப்புதான். ஆனாலும் சூதாகரமாக வெளியிலே காட்டிக் கொள்ளாமல் கும்பலோடு சேர்ந்து கோவிந்தா போடுகிறார்கள்.

❍ உண்மையைச் செல்லுங்கள் Covid 19 ற்கு முன்பே சில பங்குகளில் சமூக இடைவெளி இருந்ததில்லையா? எந்தெந்த ரூபத்தில் இருந்தது

❍ தீண்டத்தகாதவர்கள், பேசக்கூடாதவர்கள், முகத்தைக் கூட பார்க்கத்துணியாதவர்கள், பீடத்தில் ஏறக் கூடாதவர்கள், பாடகர் குழுவில் இடம் பெறத்தகுதியற்றோர், தலைமைப் பதவிகளை ஏற்கத் தகாதோர் என சிலரையும்

❍ இந்த வட்டாரப் பூசைக்கு அவர்கள் வரமாட்டார்கள், அந்த அன்பிய பூசைக்கு இவர்கள் வரமாட்டார்கள், இந்தப் பாதர் பூச வைத்தால் அவர்கள் கோயில் பக்கமே வரமாட்டார்கள், அந்தக் குழுவினர் கஞ்சி காய்ச்சினா இவர்கள் சாப்பிட மாட்டார்கள்...... என பலரையும் நாம் கண்ணாரக் கண்டதில்லையா? சமூக இடைவெளி நமக்கு புதுசா என்ன?

❍ சமூக இடைவெளியை விட மோசமானது இந்தகைய மனசு - இடைவெளி மாந்தர்களே!



❍ இவ்வளவு காலமும் 'எங்க போறீங்க' என்று கேட்டா 'நாங்க பூச பாக்கப் போறம்' எண்டு வாய் நிறையச் சொல்லுவீங்களே என் பக்த கோடிகளே உங்க வாய்ச்சொல்லுக்கு ஏற்ப " கொரோனா" வச்சது பாருங்க எல்லோருக்கும் ஆப்பு. பூசைய பாக்க வச்சது பாருங்க எல்லாரையும் வுஜ இல. இனியாவது பூசையில " பங்கேற்க போறன்" எண்டு செல்லுங்க மக்கா.....

❍ **இப்படியும் சில புதினங்கள் ...............**
ஒரு சில சாமிமார் ஒளிச்சு மறைச்சு பூச வச்சாங்களாம். அதிலே பங்கு கொள்ள ஒரு சில பக்தர் கூட்டம் ஒளிஞ்சு மறைஞ்சு வந்ததாம். அப்பப்பா புல்லரிக்குது. வேதகலாபனைக் கால திருச்சபை மீண்டும் வேரூன்றத் தொடங்கித்து. றொம்ப மகிழ்ச்சி வெறும் ஆடம்பரத்துக்காக அல்லாமல் அர்த்தத்தோடு செய்தால் எல்லாம் சிறப்புத் தான்

- அவ்வகையில் இதையும் பாராட்டியே ஆகவேணும் கொரோனாவின் மகிமையால்
- குடும்ப செபமாலை மீண்டும் உரக்க ஒலித்தது இறைவார்த்தை வாசிப்பும் இடையுறாது நடந்தது.
- குடும்பமாகச் சேர்ந்து திருப்பலி கண்டு மகிழ்ந்தனர்.
- இறைவிசுவாசம் ஆழமானது மறையறிவு விஸ்திரமடைந்தது.
- இறைத்தேடலின் தூண்டுதலால் விவிலிய விளக்கங்கள் பலுகிப்பெருகின
- புதுப்புது முகங்கள் முன்னோக்கி வர புனித திருஅவையும் பொலிவு பெற்றது.

❍ இது இப்படியிருக்க ஒரு சில பங்குச் சாமியார் பாடு திண்டாட்டமானது:
எங்கட பாதர் FB இல பூச வைக்கிறார் என ஒரு சிலர் புகழாரம் பாட...
நீங்களும் வைங்களன் பாதர் என மற்றும் சிலர் பங்குத்தந்தையை வறுத்தெடுக்க...
இதென்னடா 'மதுரைக்கு வந்த சோதனை' என பங்குத்தந்தை தலையைப் பிய்க்க...
அய்யகோ! இதைவிட நமக்கு கொரோனாவே வந்திருக்கலாமே என அவர் அங்கலாய்க்க...
அவர் பாடு கொஞ்ச காலம் 'அலவாங்கை விழுங்கின' மாதிரிதான் இருந்தது.

❍ அதைவிட இன்னுமோர் தர்மசங்கட நிலை...
ஏற்கனவே பொருளாதார ரீதியாக பாதிக்கபட்டிருந்த பங்குத்தந்தையகர்ளை
5 அல்லது 6 பேரோடு பூசை வைக்கலாம் என அனுமதி கொடுத்த வேளையில்...
யாரைத் தேர்ந்தெடுப்பது என்ற குழப்ப நிலை உண்டாவது சகஜமே!
இந்த நேரங்களில் மாண்புமிகு பங்குத்தந்தை வாங்கிய ஏச்சுக்கள் கொஞ்ச நஞ்சமா!
ஒரு சில இடங்களில் அவரை கழுவிக் கழுவி ஊத்தியே விட்டார்கள்

❍ இன்னுமொரு பங்கில்...... குருத்தோலை ஞாயிறு விடிகாலை,
பங்குத்தந்தையின் கதவு பலமாகத் தட்டப்பட்டது. என்ன என்று வினவ:
"அந்தக் கோயிலில் பாதர் பூச வைக்கிறாராம்,
குருத்து ஆசீர் வதிக்கிறாராம் நீங்களும் வந்து வைங்களன்."
"அப்படிச் செய்ய எனக்கு அனுமதி தரப்படவில்லை" பங்குத்தந்தை கறாராக் சொல்ல.
"அப்படியானால் atleast வெளிய வந்து முன்னால இருக்கிற தென்ன மரங்களயாவது ஆசீர்வதிங்கோவன்: குருத்துக்கள நாங்க வெட்டி வீடு வீடாக கொடுக்கிறோம்."
அடடா, இறையரசு ஏற்கனவே மண்ணில் மலர்ந்திட்டோ என சந்தேகமா இருக்கு.
வீட்டுக்கு கொண்டு போகும் குருத்துக்கள் படுற பாடு குருசு ஆண்டவருக்குத்தான் வெளிச்சம்.
தொப்பி அளவானவங்க மட்டும் போட்டுக்கொள்ளுங்கோ...

❍ பூசைக்குள் phone பாவனை கூடாது என எச்சரித்த காலம் மாறி Phone க்குள்ள பூச பாக்கிற காலம் வந்திட்டல்லோ... தாய், தாயோடு சேய், சேயோடு நாய் பூசைக்குப் போன காலம் மாறி தாய் மடியில் சேய், சேய் மடியில் நாய் உறங்க பூசை பார்க்கும் காலமிது.

❍ வழமையான பூசைப் பிரசங்கத்திலே கதைகளை தாராளமாய் சொல்லுகின்ற குரு அவர்.
FB இல போட்ட பூசையிலும் கதைகளை அள்ளி வழங்கியிருந்தார்.
யாருமே இல்லாத கடையில யாருக்கையா Tea ஆத்துறீங்க!!!
உங்க கடமை உணர்ச்சிக்கு ஒரு அளவே இல்லையா!!!
கேட்டுப் பயனடைந்தோர் என்னைத் திட்டாதீர்.

❍ சதாகாலமும் வுஏஇல் மெகா சீரியல் பார்த்துப் பார்த்து கண்கள் பூத்திருந்த நம் மகா ஜனங்களுக்கு, திடீரென திருப்பலியைப் பார்த்தபோது, சீரியல் ஞாபகத்திலேயே சிலர் தேம்பித் தேம்பி அழுததாகவும் ஆங்காங்கே முரசொலிகள் முழங்குகின்றன.



❍ ஒருசில பங்குகளில்......
- திருப்பலிக்கு மக்களை ஒழுங்குபடுத்த...
- திங்கள் பச்சை, செவ்வாய் சிவப்பு, புதன் மஞ்சள் என கலர் கலராய் அட்டைகள் கொடுக்கப்பட்டதாகவும் கேள்வி.
- கத்தோலிக்கம் கலர்புள்ளாகிறது. அபரீத ஐடியாக்களுக்கு வாழ்த்துக்கள்!

❍ இவை கலியாணப் புதினங்கள்...
- 10 பேர் மாத்திரமே ஆலய நிகழ்வில் பங்குபற்றலாம் - அரசாங்க உத்தரவு. ஏ சும்மாவே தனது பெயரை கொட்டை எழுத்தில் பத்திரைகையில் போடவில்லை என சண்டை பிடிக்கும் பெரியப்பா ஏ தன்மை முறைப்படி கூப்பிடல என முறைப்படும் முறைமாமன்
- போட்டோக்கு கூப்பிடல என சபை குழப்பும் மாம
- கறியில லெக்பீஸ காணோம் என காண்டாகும் பங்காளி...
- இப்படியான வாயாடிகளின் வாய்களை அடைத்ததிலே கொரோனாவுக்கு ஒரு சலாம்!!

❍ கொரோனா காலத்தில் உயிர்நீத்த உத்தம ஆத்துமாக்களே!
உங்களுக்கு சாவுப் பூசை கிடைக்கவில்லையென உள்ளம் கலங்காதீர்.
உமையழைத்த இறைவனின் விண்ணக வீட்டிலே நிச்சயமாய் உங்களுக்கான இடமுண்டு.
ஏனெனில் கடவுளின் நீதியை விட அவரது இரக்கமே என்றும் மேலோங்கியுள்ளது.

❍ தற்காலப் பக்தனின் புலம்பல்...
முகத்தை திறந்து கொண்டு கேட்ட விண்ணப்பங்களுக்கே இன்னும் பதில காணல...
இப்ப முகத்த மூடிக் கொண்டு கேட்டால், நான் யாரெண்டு கடவுளுக்குத் தெரியுமா???

❍ தற்கால அறிவித்தல் - "நன்கு கைகளைக் கழுவிவிட்டு ஆலயத்திற்குள் வரவும்".
- கைகளை மட்டும் வெறுமனே கழுவினால் போதுமா?
- நமது உள்ளத்திலும் மனத்திலும் கடினமாய் பதிந்துள்ள பாவ Virus ஐ என்ன செய்வது? எப்படி சுத்தம் செய்வது?

கொரோனாவை விட கொடிய வைரசுகள் நம்மிடையே குடிகொண்டிருந்ததை இப்போதாவது கண்டுகொண்டோமா?
இந்தக் கொரோனா காலம் அதற்கான தீர்வுகள் எதையேனும் கற்றுத் தந்ததா??? !

"எனது வெற்றிகளின் மூலம் என்னை மதிப்பிடாதீர்கள், எத்தனை முறை கீழே விழுந்து மீண்டும் எழுந்தேன் என்பதன் மூலம் மதிப்பிடுங்கள்."
நெல்சன் மண்டேலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1ம் பக்கத் தொடர்ச்சி ... மெய்நிகர் தீய.....

இணையத்தளத்தில் காணப்படும் Chat Rooms, Dating Sites ஆகியனவும் Face Book, Twitter, Whatsapp போனற சமூக ஊடகங்களும் புதிய உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளும் களமாக அமைகின்றன. இன்று இணையத்தில் இணயதள காதல், இணயதள மோகம், இணையத்தள பாலுறவு (Cyber Sex) ஆகியவற்றையும் காணலாம். சாதாரன மனித வாழ்க்கையில் மனிதா்களை மயக்கி ஏமாற்றுபவா்கள் இணையத்தளத்திலும் ஏமாற்றுபவா்களாகவே இருக்கின்றனா். பலா் தங்களுடைய மணத்துணைவா்களின் நடத்தையில் மாற்றங்களை அவதானிக்கின்றனா். உதாரணமாக பாசம் காட்டுதல், குடும்ப வாழ்வில் அக்கறை எடுத்தல், குழந்தைகளின் மீது அக்கறை எடுத்தல், குடும்ப கடமைகளை நிறைவேற்றுதல் ஆகியவற்றில் அசட்டுத்தனமாக இருக்கின்றனா். இவருடைய நடவடிக்கைகளை தேடிப்பார்க்கும் போது இவா்கள் மெய்நிகர் விபசார உறவுகளில் சிக்குண்டு இருக்கின்றமை தெரியவருகின்றது. இவ்வாறான தீய நடத்தைகள் விவாகரத்துக்கு இட்டுச்செல்லும் ஒரு காரணியாக இருந்த போதும் இக்காரணியே விவாகரத்தினை தீர்மானிக்கின்ற குற்றமாக கருதமுடியுமா? என்ற விவாதம் தற்போது எழுந்துள்ளது. ஏனெனில் மெய்நிகா் விபசாரத்தில் ஈடுப்பட்டமையை நிருபிக்க இன்று யாரையும் தேடிப்பார்க்க தேவையில்லை காரணம் இணையத்தளத்தில் இவர்களுடைய நடவடிக்கைகளை பதிவிறக்கம் செய்துகொள்ளும் செயலிகள் தற்போது இருக்கின்றன. இவை மெய்நிகர் விபசாரத்தின் உண்மை நிலையை வெளிப்படையாக காட்டிவிடும்.

இணையத்தள தீய உறவுகள் திருமண வாழ்வில் நிகழும் போது அது மாபெரும் காட்டிக்கொடுப்பாகும். மிக வேதனைக்குரிய சமூக பாவமாகும். மெய்நிகர் தீய உறவில் திருப்திகண்டு அதற்கு அடிமையாகிப் போனவா்கள் திருமண புனிதத்திற்கு விரோதமாக குற்றம் இழைக்கின்றனா். மெய்நிகா் துரோகம் (Virtual Infidelity) இன்று கவனம் செலுத்தப்படவேண்டிய அதி முக்கிய சமூக தீமையாக உருவெடுத்து வருகின்றது. குடும்ப சிக்கல்களை தீர்த்துக்கொள்ள உளவியல் ஆற்றுப்படுத்தல் பெற வரும் பலா் கையடக்கத்தொலைபேசி, மின்னஞ்சல் மற்றும் சமூக ஊடகங்களின் பாவனையினால் ஏற்பட்ட பிரச்சினைகளாலேயே அதிகம் துன்புருகின்றனா். இதனால் மணத்துணைவா்கள் குடும்பத்தோடு நீண்ட நேரம் செலவழிப்பது, குழந்தைகளை கவனித்தல், குடும்ப பொருப்பினை நிறைவேற்றுதல் ஆகிய காரணங்களில் இருந்து விலகி பெரும்பாலான குடும்ப சிக்கல்களில் சிக்கிவருகின்றனா்.

மெய்நிகர் விபசார உறவுகள் நேரடித்தொடுகை சார்ந்த உறவுகளை கொண்டிராமல் இருந்தாலும் அவை புனிதமான திருமண உறவிற்கு குந்தகம் விளைவிக்கும் காரணியாக விளங்குகிறது. இது நேரடி பாலுறவற்ற விபசார உறவாக கணிக்கப்பட்டாலும் இங்கே மணத்துணைவா்கள் தங்களின் திருமணத்திற்கு வெளியே மெய்நிகர் உறவு கொண்டிருப்பதால் இது திருமணத்தின் தூய்மையை சீர்குலைக்கின்றது.

மெய்நிகர் விபசாரம் ஆபாச படம் பார்த்தல் போன்று ஒரு நபரின் சீரான மனநிலையை சிதைத்து அவரை ஒரு உள நோயாளியாக மாற்றி தனிப்பட்ட மற்றும் குடும்ப வாழ்விலும் பேராபத்தை உருவாக்குகின்றது என்று ஆய்வாளா்கள் கூறுகின்றனா். இந்த ஆய்வின் உண்மை தன்மையையே இயேசு கிறிஸ்து ஒரு பெண்ணை ஒருவா் இச்சையோடு நோக்கும் போது அவளோடு அவன் விபசாரம் செய்கின்றானென்று முன்குறித்து வைத்தாா். மெய்நிகா் தீய உறவுகள் நேரடி மெய் தொடுகை இல்லாத போதும் அது விபசாரமாகவே கருதப்படுகின்றது. அவை தனிமனித, குடும்ப, சமூக மற்றும் ஆன்மீக வாழ்வில் பெரும் தாக்கத்தை விளைவிக்கின்றன. திருத்தந்தை இரண்டாம் ஜோன் போல் அவா்களின் கருத்துப்படி இறைசாயலாக படைக்கப்பட்ட மனிதனின் விலைமதிக்கப்படாத மாண்பிற்கு விரோதமாக ஏராளமான நிகழ்வுகள் இடம் பெறுகின்றன. மெய்நிகர் விபசாரம் அதில் ஒன்றாகும். இத்தகைய உறவுகள் பல பொழுதுபோக்குக்காகவும், சிற்றின்ப ஆசைகளை தனித்துக்கொள்ளும் நோக்கத்துடன் இருப்பதால் இவ்வுறவு நிலையில் இருப்போரின் போலி முகங்கள் பாரதூரமான மனித உரிமை மற்றும் மனித மாண்புக்கு குந்தகம் விளைவிக்கின்றமை வெள்ளிடை மலையாகும்.

*அருட்பணி. கிறிஸ்டி போல்*
*திகன - கண்டி மறைமாவட்டம்*




# கோவிட் 19 என்னும் தூதுவன்

இதயத்தை
பத்திரமாக
பிடித்துக் கொள்ளுங்கள்......
நடக்க இருப்பது நதிக்கரையில் அல்ல
இரத்தக் கறையில்........

**FR. A. சகாயநாதன்**
**சுல்தான்பேட் மறைமாவட்டம்,**
**தென்னிந்தியா**

இந்தக் கவிதை எங்கோ படித்த ஞாபகம், இன்று என் இதயம், ஏன் நம்ம இதயம் இன்னும் சொல்லப்போனால் இந்த ஒட்டுமொத்த மனித இனத்தின் இதயமுமே இப்படித்தான் இருக்கின்றதோ என்று தோன்றுகிறது.

இலங்கையில் போர், கடற்கரையில் சுனாமி, சிரியாவில் பதட்டம், ஆப்கானில் தீவிரவாதம், அமெரிக்காவில் தொற்று இப்படி எல்லாம் கேட்கும் போது, இது என்னைத் தொடாது எனக்கு இதுப் பிரச்சினையில்லை அப்படித்தான் இருந்தேன், இருந்தோம். உலகப்போர் என்று இரண்டுமுறை உலகம் மிரண்டாலும், அந்த நிலைகூட சில தேசங்களை அமைதி பூங்காவாகவே விட்டு வைத்தது. ஆனால் கொரோனா எப்படி பரவுகிறது? எத்தனை நாள் இருக்கும்? இது எப்படி குணமாக்குவது? இந்த கேள்விகளுக்கெல்லாம் மர்மமே பதிலாய் தொடர்கிறது.

**இது உலக அழிவா?**
எரேமியா 15 – 18 எனக்கு ஏன் தீராத வேதனை? குணமாகாக் கொடிய காயம்? நீர் எனக்குக் கானல் நீரென ஏமாற்றும் ஓடையென ஆகிவிட்டீரோ!

இது தீவிர கொரோனா பரவலில் இருக்கிற பல நபர்களுடைய ஆதங்கமாக கூட இருக்கலாம். இது மட்டும் அல்ல வெட்டுக்கிளி தாக்குதல், புயல், வெள்ளப்பெருக்கு, எல்லைப்பிரச்சனை, நிறவேற்றுமை, உணவுக்கே வழி இல்லாமல் ஏழைகள் படும்பாடு, பொறுப்பே இல்லாத நாட்டுத் தலைவர்களின் பேச்சு, மவுனமாகி போன மத தலைமைகள் இவையெல்லாம் உலக முடிவுக்கான ஆயத்தமாக தானே பார்க்க வேண்டியுள்ளது.

**இது அழிவின் ஆரம்பம் என்றால் நாம் என்ன செய்ய?**
கடவுளை நோக்கிக் கூப்பிடு
எரேமியா 33 – 3 என்னிடம் மன்றாடு உனக்கு நான் செவிசாய்ப்பேன் நீ அறிந்திராத மாபெரும் செயல்களையும் மறைபொருள்களையும் உனக்கு நான் விளக்கிக் கூறுவேன். உலக விஞ்ஞானத்துக்கும், மனித மெய்ஞானத்துக்கும் கட்டுப்படாமல் இன்று உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் இந்த வைரசை இப்போது கட்டுப்படுத்த ஒரே வழி அரசுகள் சொல்கின்ற மதிமுறையோடு கடவுளை நம்பி நம்மை நாமே பாதுகாத்துக் கொள்வதுதான். உலகத்திற்கு கொள்ளை நோய்கள் ஒன்றும் புதியது அல்ல, இது போல பல நோய்களை சந்தித்துத் தான் இந்த உலகம் விடுபட்டுள்ளது.

**நம்மை காக்கும் கடவுள் என்ன செய்வார்?**
எசாயா 41 – 10 அஞ்சாதே, நான் உன்னுடன் இருக்கிறேன் கலங்காதே, நான் உன் கடவுள் நான் உனக்கு வலிமை அளிப்பேன், உதவி செய்வேன், என் நீதியின் வலக்கரத்தால் உன்னைத் தாங்குவேன். இன்று இந்த உலகத்திற்கு அதிகமாய் தேவைப்படுவது மருந்து மாத்திரையோ, மருத்துவமனைகளோ அல்ல கட்டுப்பாடுள்ள உள்ளம், அரசின் வழிமுறைகளைக் கடைப்பிடிக்கும் உள்ளம். இது இருந்தாலே போதும் கொரோனாவை வென்றுவிடலாம் என்பதை நியூசிலாந்து போன்ற நாடுகள் மிக தெளிவாக நமக்கு உணர்த்தி விட்டன. (ஏறக்குறைய கடந்த ஒரு மாதமாக நியூசிலாந்தில் கொரோனா தொற்று எண்ணிக்கை பூச்சியம்) எனவே கடவுளின் உடனிருப்பை நம்பி நம்மை நாமே கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**கொரோனா விடுக்கும் செய்தி என்ன?**
கொரோனா மட்டுமல்ல உலகில் பல தொற்று நோய்களும் உலக அழிவிற்கு காரணமாகும் என்று சொல்லப்பட்ட மிகப்பெரிய போர்களும், ஒரு இனத்தையே அழிக்க வேண்டுமென்று இனவெறி போராட்டங்களும் அதன் நிறைவை அடைந்த பின் ஒரு பெரும் வளர்ச்சியை சமுதாயத்திற்கு தந்திருக்கிறது என்பது தான் ஏகாந்தமான உண்மை. எடுத்துக் காட்டாக விடுதலைப்பயணத்தில் முதல் அதிகாரங்களில் இஸ்ரயேலரை கொன்றொழிக்க பார்வோன் செய்த பெரும் சூழ்ச்சி, இஸ்ரயேல் இனத்தின் பெரும் எழுச்சியாய் மாறியது. இயேசுவை கழுமரம் ஏற்றி கொன்றொழி கொக்கரிப்பு இயேசுவை உலக நாயகனாக்கியது. இரண்டாம் உலகப்போரின் அழிவுக்குப் பின் தொடங்கியது தான் நாம் காணும் இந்த கம்பியூரீட்டர் புரட்ச்சி. இப்படி பல அழிவுக்குப் பின்னும் பெரும் வளர்ச்சிகள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. எனவே! எரேமியா இறைவாக்கினரைப் போல நாமும் சொல்வோம் எரேமியா 15ஹ16 நான் உம் சொற்களைக் கண்டடைந்தேன், அவற்றை உட்கொண்டேன், உம் சொற்கள் எனக்கு மகிழ்ச்சி தந்தன என் உள்ளத்திற்கு உவகை அளித்தன ஏனெனில் படைகளின் ஆண்டவரே உம் பெயரே எனக்கு வழங்கலாயிற்று.

**இறுதியாக**
பிலிப்பியர் 4:13 எனக்கு வலுவூட்டுகிறவரின் துணை கொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு. என்னும் பவுலடியாரின் நம்பிக்கையை போன்று கொரோனா என்னும் இப்பெரும் அழிவை இந்த உலகத்திலிருந்து உடன் அகற்ற ஒரே வழி சுயதனிமையும், இதுவும் கடந்து போகும் என்ற மனஉறுதியும் தான். எனவே தீங்கு உமக்கு நேரிடாது, வாதை உம் கூடாரத்தை நெருங்காது (திருப்பாடல் 91:10) என்ற உறுதியில் தொடர்வோம்.

**அனுபவம் ஓர் உயர்ந்த நகை, ஏனென்றால் அது மிகவும் கூடுதலான விலை கொடுத்தே வாங்கப்பட்டிருக்கின்றது - ஷேக்ஸ்பியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்களுக்கு ...

# உங்கள் குழந்தைக்கு உங்கள் செயல்களே வழிகாட்டி

**Cellphone, Cartoon, computer games என்று தங்கள் உலகம் சுருக்கிக் கொள்ளும் உங்கள் குழந்தைகளை மற்றவர்களுடன் பழகும் பண்பாடு மிக்கவர்களாக வளர்க்கின்றீர்கள் என்றால் அதைவிட பெரிய கொடை உங்கள் குழந்தைக்கு நீங்கள் கொடுக்க முடியாது.**

விடுமுறை நாளின் மாலை நேரம்... கடற்கரையை ஒட்டியிருந்த அந்தப் பிரபலமான உணவகத்திலும் கூட்டம், கடல் அலைகள் போலத்தான் இருந்தது. ஓர் அலையை அடுத்து இன்னோர் அலை வருவதுபோல, சாப்பிட்டு முடித்த டேபிளை விட்டு ஒரு குழு எழுந்தால், இன்னொரு குழு உட்கார காத்திருந்தது.

அப்படித்தான் ஷிவானி குடும்பமும் காத்திருந்தது. 10 வயது ஷிவானி, அப்பா, அம்மா எனக் கச்சிதமான குடும்பம். நான்கு பேர் உட்காரும் சேர்கள் கொண்ட ஒரு டேபிள் காலியானது. காத்திருந்த வரிசைப்படி இவர்களை அமரச் சொன்னார் உணவகப் பணியாளர். மூவரும் அமர்ந்தார்கள். இவர்களுக்கு அடுத்து காத்திருந்தவர்கள், கொஞ்சம் வயதான தம்பதிகள்.

"நீங்க கொஞ்சம் வெயிட் பண்ணுங்கள் வேற டேபிள் காலியானதும் சொல்றேன்" என்று நகர்ந்து விட்டார் பணியாளர். திரும்பிப் பார்த்த ஷிவானி என்ன செய்தாள் தெரியுமா? சட்டென எழுந்துகொண்டு, "தாத்தா, பாட்டி நீங்க உட்கார்ந்துக்கங்க" என்றாள்.

அந்த வயதான தம்பதிகள் புன்னகைத்து. "வேணாம் செல்லம், நீ உட்கார்ந்துக்க" என்றார்கள்.

"இல்ல, ஒரு சீட் வேஸ்ட்டா தானே இருக்க போகுது. நான் அம்மா மடியில உட்கார்ந்து சாப்பிட்டுக்கிறன்" என்று அவர்களுக்கு இடம் கொடுத்தாள்.

அத்தனை பரபரப்பிலும் உணவகத்தில் இருந்த பலரும் அந்தக் காட்சியைப் பார்த்து ரசித்தார்கள். அங்கே ஒரு புது உறவு அழகாகப் பூத்திருந்தது. ஆம்! அந்த வயதான தம்பதிகளுக்கு, அந்த நிமிடமே ஷிவானி பேத்தி ஆகிவிட்டாள்.

பரஸ்பர அறிமுகத்துடன் ஐந்து பேரும் ஒன்றாக ஆர்டர் செய்து, சிரித்துப் பேசி சாப்பிட ஆரம்பித்தார்கள். அந்தப் பேச்சு ஷிவானி பற்றியே அதிகமாக இருந்தது. வெளியே சென்றால் மற்றவர்களிடம் எப்படியெல்லாம் நடந்துகொள்ள வேண்டும் என்பதை அப்பா, அம்மா இருவரும் சொல்லிக் கொடுத்திருப்பது பற்றி அந்தப் பேச்சில் பகிர்ந்தார்கள்.

நம் வீட்டைப் போலவே பொது இடத்தையும் கருத வேண்டும். நம் வீட்டு மனிதர்களுக்குத் தரும் மரியாதை, செய்யும் உதவி போலவே பொது இடத்தில் சந்திக்கும் மனிதர்களுக்கும் செய்ய வேண்டும். இதை நம் செயல்கள் வழியே குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்தால், சமுதாயத்தின் வெளித் தோற்றமும் தூய்மையாக இருக்கும். மனிதர்களுக்கிடையான அகச் செயற்பாடுகளும் சிறப்பாக இருக்கும்.



ஒரு வரிசையில் நிற்கும்போது, நமக்குப் பின்னால் வயதானவர்கள் இருந்தால் அல்லது நமக்கு இருக்கை கிடைத்து நம்மை விடப் பெரியவர்களுக்கு கிடைக்காமல் இருந்தால், அவர்களுக்கு நம் இடத்தை விட்டுக் கொடுத்த நம் குழந்தைகளுக்கு முன்மாதிரியாவோம்.


விழா உற்சாகமோ. சூழ்நிலை பரபரப்போ, எதிர்பாராமல் கிடைக்கும் வாய்ப்போ நம் குணத்தை மாற்றிவிடக் கூடாது என்பதை குழந்தைகளுக்கு உணர்த்துவோம். தனி மனித ஒழுக்கத்தின் அவசியத்தை. சக மனிதர்களுடன் பழகும் பண்பாட்டை நம் குழந்தைகளுக்குள் விதைப்போம். அதைவிட சிறந்த செல்வமாக வேறு எதைக் கொடுத்து விட முடியும்.


**- இணையம்**

## சிறுவர்களுக்கான போட்டி

## படத்திலுள்ள 06 வித்தியாசங்களை கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்

## இயேசு பன்னிரெண்டு வயது சிறுமியைக் குணப்படுத்துதல்





- பாலர் முதல் தரம் 5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01 இற்கு மாத்திரம் நிறம் தீட்டி வித்தியாசங்களை கண்டுபிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- 1, 2, 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்
  1ம் பரிசு - 500/= 2ம் பரிசு - 300/= 3ம் பரிசு - 200/=

பெயர் ..................................................................

முகவரி ..................................................................

பங்கு ..................................................................

தரம் ..................................................................

**முடிவுத் திகதி 10.08.2020**

**"உன்னை தாழ்த்தி பேசும் போது, ஊமையாய் இரு. உயர்த்திப் பேசும்போது செவிடனாய் இரு, வாழ்வில் எளிதில் வெற்றி பெறுவாய்." - சுவாமி விவேகானந்தர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹாய் குட்டீஸ்



## திருவிவிலிய புதிர் போட்டி எண்: 42

## எஸ்தர் அதிகாரம் 6 – 10 வரை

01. யூதரின் துன்பம் எவ்வாறு மாறியது?
விடை :-..........................................................................................
02. மன்னரது ஆட்சி குறிப்பேட்டை ஆமான் வாசித்த போது மன்னன் கூறியது என்ன?
விடை :-..........................................................................................
03. கடும் சினமுற்ற மன்னர் எங்கே நுழைந்தார்?
விடை :-..........................................................................................
04. ஆமானிடமிருந்து கழற்றப்பட்ட தனது கணையாழியை அரசர் யாருக்குக் கொடுத்தார்?
விடை :-..........................................................................................
05. ஆமானின் புதல்வர்கள் எத்தனை பேர்?
விடை :-..........................................................................................
06. எஸ்தர் யாரை? யாருக்கு பொறுப்பாளராக நியமித்தார்?
விடை :-..........................................................................................
07. மொர்தக்காய் அரச மாளிகையில் எப்படி காணப்பட்டார்?
விடை :-..........................................................................................
08. மொர்தக்காயை தூக்கிலிட ஆமான் நாட்டியது என்ன?
வவிடை :-..........................................................................................
09. அரண்மனை வாயிற் காவலர்கள் யார்? யார்?
விடை :-..........................................................................................
10. மொர்தக்காய் மன்னனின் முன்னிலையிலிருந்து வெளியேறிய செய்தி யூதருக்கு எப்படி காணப்பட்டது?
விடை :-..........................................................................................

**பெயர் :..............................................**
**பங்கு :............................................**
**முகவரி:............................................**
**..............................................................**

**முடிவுத்திகதி 10.08.2020**

# விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 35


## 02 தெசலோ அதி 01-03 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இ | | | | | ■ | ■ | | | அ |
| ■ | ■ | | | | | | | | ந |
| ஊ | | | | | | | ■ | ■ | ■ |
| | | | | | | | | அ | ■ |
| | ■ | | | | | | | தி | எ |
| | உ | | | | | | ■ | ■ | |
| | ■ | ■ | | | | | அ | ■ | |
| | பு | | | | | | | ■ | |
| ந | ■ | தீ | | | | | | | |
| ம | | | | | | | | | |

01.எ.....பொ....... ....... ம்
02. இறை......ட்......
03.ந......செ......தி
04. அடை....... எம்
05. ஊ..... ....... மளி.......து
06. பு......ழ்பெ.......ற.......
07. தி......மு.......த்......ல்
08. தீ.....னிட...... .......ந்து
09. உண்.......லா......து
10. அ.......வு......த்....கி.....ம்
11. ந......மை......ய்......தி.....
12. ம...ந்.....ள.... .....ண்....ம்
13.அ......தி

**பெயர் :..................................**
**பங்கு :..................................**
**முகவரி:................................**
**.................................................**

**முடிவுத்திகதி 10.08.2020**



# ஹாய் குட்டீஸ்

## திருவிவிலிய புதிர் போட்டி எண்: 41

## எஸ்தர் அதிகாரம் 1 – 5 வரை

## விடைகள்

01. ஆமான்
02. மொர்தக்காய்
03. இந்தியா தொடங்கி எத்தியோப்பியா வரை இருந்த 127 மாநிலங்களை ஆட்சி செய்த மன்னன்
04. அரசெங்கும் இருந்த அவர் தம் இனத்தவராகிய யூதர் அனைவரையும் அழிக்க
05. எஸ்தரின் சிற்றப்பன்
06. தனது கணையாழி
07. மன்னர் அகஸ்வேரை
08. அரசி வஸ்தி
09. மொர்தக்காய்
10. சூசா

**பங்குபற்றியவர்கள் : 37 குட்டீஸ்**
**எவரும் சரியான பதில் அளிக்கவில்லை**

**பங்குபற்றிய குட்டீஸ் அனைவருக்கும் பாராட்டுக்களும் நன்றியும்**




# நல்வாழ்வு காணவே

அருட்பணி என். சி. அருள்வரதன்

கவிதை வரிகளை சரியாக வடிவமையுங்கள்.
போட்டியில் எல்லோரும் பங்கு கொள்ளலாம்

1ம் இடம் 500/-
2ம் இடம் 300/-
3ம் இடம் 200/-

இதோ கவிதை வரிகள்

- நலன்கள் காண்போம் வாழ்வினிலே
- நன்மைகளை நாடிச் செல்வோம்
- தீவினையும் வேண்டாமே
- தீமைகள் வேண்டாம் வாழ்வில்
- பிறரன்புப் பணிகளை
- பெரிதென நாமெண்ணி
- துணைபுரிய முன்வரும் போது
- நிச்சயம் நம் வாழ்வு
- பெருமைகளைக் கண்டே தீரும்
- அன்பும் அறநெறிகள்
- நம்மோடு இணைந்துகொள்ள
- உண்மையில் நம்வாழ்வு
- பெருமைகளைக் கண்டே தீரும்

**இப்போது கவிதை வரிகளை சரியாக வடிவமையுங்கள்**

"நம் முயற்சியைக் கைவிடுவது தான் மிகப்பெரிய பலவீனம். மேலும் ஒருமுறை முயற்சி செய்வதே வெற்றி பெறுவதற்கான மிகச்சரியான வழி" - தோமஸ் அல்வா எடிசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தவக்காலத்தை முன்னிட்டு மறைமாவட்ட திருப்பபலத்துவ சபை சிறார்கள் நாளுக்கொரு புனிதரையும், ஊக்குவிப்பாளர்கள் நாளாந்த நற்சிந்தனைகளையும் வழங்கி சிந்திக்கத் தூண்டினார்கள். Covid - 19 வைரஸ் தொற்றுக் காரணமாக திருப்பாலத்துவ சபையின் மாதாந்த செயற்பாடுகள் தடைப்பட்டபோதிலும் இயக்குனர், அருட்தந்தையர்கள், ஊக்குவிப்பாளர்கள், சிறார்கள் தவக்கால சிந்தனைகளையும் Covid - 19 சம்மந்தமான விழிப்புணர்வு செய்திகளையும் Facebook, YouTube ஆகியவற்றில் பதிவிட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.




நற்செய்தி மீள் அறிவிப்பு ஆண்டில் வணக்க மாத சிறப்பு நிகழ்வாக, வணக்க மாதச் செபத்தை சாம்பல்தீவு புனித திருமுழுக்கு யோவான் பங்கு மக்கள் செயற்படுத்த, தேவதாயினுடைய காட்சிகளை திருப்பாலத்துவ சபைப் பிள்ளைகள், சிறிய குருமட மாணவர்கள் சிந்தனைகளாக வழங்கினார்கள். தேவதாயின் மன்றாட்டு மாலையில் வரும் பெயர்கள் அவற்றின் விவிலிய வரலாற்றுப் பின்னனிகளை அருட்தந்தையர்கள் நற்சிந்தனைகளாக பிரசங்கித்தார்கள். இவை அனைத்தும் Facebook, YouTube ஆகியவற்றில் காணக்கிடைக்கின்றது.

## திருகோணமலை மறைமாவட்டத்தில் திருத்தைலத் திருப்பலி - 24.06.2020



அருளடையாளக் கொண்டாட்டங் களுக்கான திருத்தைலம் மந்திரிக்கும் திருச்சடங்குத் திருப்பலி கொரோனா நோய்த்தொற்றுக் காரணமாக புனித வாரத்துக்குப் புறம்பே 24.06.2020 புதன்கிழமையன்று மாலை 5.00 மணிக்கு திருகோணமலை மறைமாவட்ட ஆயர் தலைமையில் குருக்கள், துறவறத்தவர், இறைமக்கள் பங்கேற்க புனித மரியாள் பேராலயத்தில் நிறைவேற்றப்பட்டது. இத் திருப்பலி வேலையில் குருக்களின் அர்ப்பணிப்பினைக் குறித்து மறையுரையில் தெளிவுபடுத்திய ஆயருடன் சேர்ந்து குருக்களனைவரும் தங்கள் குருத்துவ வாக்குறுதிகளைப் புதுப்பித்துக் கொண்டார்கள்.

## வாழ்த்துகிறோம் | வரவேற்கின்றோம்



பேராயர் வான் டொட்




பேராயர் ப்ரைன் உடைகுவே

இலங்கைக்கான வத்திக்கான் நாட்டின் வதிவிடப் பிரதிநிதியாக 2014ம் ஆண்டு பங்குனி முதல் பணியாற்றி வந்த பேராயர் வான் டொட் அவர்களைத் தொடர்ந்து 2020ம் ஆண்டு ஆனி மாதம் 13ம் திகதி முதல் நைஜீரிய நாட்டைச் சேர்ந்த பேராயர் ப்ரைன் உடைகுவே அவர்கள் இலங்கைக்கான வத்திக்கானின் புதிய பிரதிநிதியாக திருத்தந்தையினால் நியமிக்கப்பட்டு தம் பணிகளை ஆரம்பித்துள்ளார். பேராயரை வாழ்த்தி வரவேற்பதில் திருகோணமலை மறைமாவட்டத் திருச்சபை மகிழ்ச்சியடைவதோடு இத்தனை காலம் அளப்பரிய சேவையாற்றிய பேராயர் வான் டொட் அவர்களின் எதிர்கால பணிவாழ்விற்காய் செபத்தோடு கூடிய வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கிறது.

## எமது ஆழ்ந்த அனுதாபங்கள்

மண்ணில்
1947
05
20



விண்ணில்
2020
05
30

### Fr. பேதுருப்பிள்ளை இருதயநாதன் அடிகளார்

எமது மறைமாவட்டத்தில் 1979 – 1986ம் ஆண்டுவரை அமல மரி சபைத் துறவியாக பாலையூற்று புனித லூர்த்து அன்னை திருத்தலம், மூதூர் புனித அந்தோனியார் ஆலயம் ஆகியவற்றில் பங்குத்தந்தையாகவும், திருகோணமலை மறைக்கல்வி நிலையத்தில் இயக்குனராகவும் பணியாற்றியர், ஏழைப்பிள்ளைகளின் கல்விக்கு வித்திட்ட அடிகள் அகதிகளுக்கு அபயமளித்து, நீதிக்காய் குரல் கொடுத்து தனக்கு உயிராபத்து இருந்தும் எத்தனையோ உயிர்களைக் காப்பதற்கு முன்நின்றவர்.

எமது மறைமாவட்டத்திற்கு அவர் ஆற்றிய பணிகளுக்காக நன்றி கூறுவதுடன் இவரது ஆன்மா நித்திய இளைப்பாற்றியடைய மன்றாடுவதோடு மறைக்கல்வி நிலைய பணியாளர் நாம் எமது மறைமாவட்டத்தோடு இணைந்து இவரது பிரிவால் துயருறும் சகோதரர்கள். உற்றார் உறவினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## மூதூர், பண்டிதர் சவரிமுத்து அவர்களின் நினைவாக குடும்பத்தினர் அனுசரனையில் குறுங்கதைப் போட்டி

### திருமலைத்தீபத்தின் புதிய படைப்பாளிகளுக்கான தேடல்

**“அம்மம்மாவின் கோழிக்குஞ்சு”**



என்ற தலைப்பில் 250 - 300 சொற்களில் உங்கள் எண்ணத்தில் தோன்றும் குறுங்கதையொன்றை எமக்கு எழுதி பரிசை வெல்லுங்கள்!
01. 08. 2020 இற்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு கீழ்காணும் ஏதாவதொரு வழியில் அனுப்பி வைக்கவும்.



1ம் பரிசு ரூபாய் 2500/-
2ம் பரிசு ரூபாய் 1500/-
3ம் பரிசு ரூபாய் 1000/-

“உங்கள் கேள்விகளுக்கு எங்கள் பதில்கள்”
மற்றும் தொடர்புகள்,
ஆலோசனைகளுக்கு எழுதுங்கள்

இல 297, டொக்கியாட் வீதி, திருகோணமலை
theepamlink@gmail.com
திருமலை தீபம்
திருமலை தீபம்

(தன் முயற்சியில்) ஒரு தவறு கூட செய்யாத ஒருவன், எந்த முயற்சியும் புதிதாகச் செய்யவில்லை என்று பொருள் - ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org